அன்பளிப்பு:£1.00

புதிய

# காரை ஒளி

# NEW KARAI OLI

January-March 1997

கலை, இலக்கிய, பொருளாதார காலாண்டு இதழ்




தைத்திங்கள் முதல்நாள் என்றார் தமிழர்கள் திருநாள் என்றார்
புத்தமு தாக வந்தது பொங்கல்நாள் என்று ஆர்க்கின்றார் – பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THANAM & Co.

Solicitors and Administrators of Oaths



## With the best compliments from
## T. Thanarajasingham

2 PARK ROAD
Southgate
London N14 6GH
Tel: 0181 - 882 0449
Mobile: 0976 660 635


தமிழன் என்ற பெருமையோடு
தலை நிமிர்ந்து நில்லடா
தரணி எங்கும் இணையிலா உன்
சரிதை கொண்டு செல்லடா

- நாமக்கல் கவிஞர் வெ..இராமலிங்கம்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# 9வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலண்டனில் நடைபெறுமா?

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேராசிரியர் தனி நாயகம் அடிகள் அவர்கள் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை அமைத்ததின் நோக்கத்தை அனைத்துலக தமிழர்களும் அறிவர்.

1966ம் ஆண்டில் பல நாடுகளைச் சேர்ந்த தமிழ் ஆராய்ச்சியாளர்கள் - அதாவது செக்கோசுலோவாக்கியா, சுவீடன், பிரான்சு, இங்கிலாந்து,மலேசியா, சிங்கப்பூர், ஆகிய நாடுகளின் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் ஒன்று கூடி தமிழ் ஆராய்ச்சியைத் திடப்படுத்த தாங்கள் ஒவ்வொருவரும், செய்யும் ஆராய்ச்சிகளின் பயன்களைக் குறித்து அறிந்து கொள்ள, மற்றவர்களுக்குப் பரப்ப, தமிழ் உலகமெல்லாம் பரப்ப தமிழ் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு உருவாக்கப்பட்டது.

முதலாவது மாநாடு வணக்கத்திற்குரிய தனிநாயகம் அடிகளாரின் பெரும் முயற்சியினால் மலேசியாவில் நடைபெற்றது. இரண்டாவது, ஐந்தாவது, எட்டாவது மாநாடுகள் தமிழ் நாட்டிலும், மூன்றாவது பாரிசிலும், நான்காவது தமிழ் ஈழம் யாழ்ப்பாணத்திலும், ஏழாவது மாநாடு மொரிசியஸ்ஸிலும் சிறப்புடன் நடைபெற்றன.

உலகிலுள்ள பல்வேறு மொழி ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள், பல்துறைப்பட்ட தமிழாராய்ச்சி செய்பவர்கள் நிறைய உள்ள பிரித்தானிய நாட்டில் இதுவரையும் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறவில்லை.

எட்டாவது தமிழ் ஆராச்சி மாநாடு இலண்டனில் நடைபெற இருந்தது. ஆனால் அச்சமயத்தில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா தனக்கு அந்த மகாநாடு நடத்திய பெருமை, புகழ் எல்லாம் கிட்ட வேண்டுமென்று விரும்பி பிடிவாதம் செய்து மாநாட்டுக் குழுவினரை மடக்கி விட்டார். அதனால் மாநாடு தஞ்சாவூரில் நடந்தேறியது. இலண்டனில் மாநாடு நடைபெறும் வாய்ப்பு ஜெயலலிதாவின் நப்பாசைக்குப் பலியாகி விட்டது.

எட்டாவது மாநாட்டில் கலந்து கொண்ட பிரித்தானிய நாட்டு பிற மொழி பேசும் தமிழ் ஆராய்ச்சியாளர்களும், மற்றும் பல அறிஞர்களும் 9வது மாநாட்டை இலண்டனில் நடத்த வேண்டும் என்று மாநாட்டு செயற்குழுவில் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அது அப்படியே ஏற்றுக் கொள்ளப
பிரித்தானிய நாட்டிலிருந்து 8வது மாநாட்டில் பங்கு கொண்டவன் என்ற முறையில் தீர்மானத்தை ஆதரித்து வற்புறுத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இச்செய்தியை ஈழநாடு விபரமாக வெளியிட்டது.

பிரித்தானிய நாட்டில் சுமார் ஒரு இலட்சம் வரையிலான இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ் நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் வாழ்வதாக மதிப்பீடு கூறுகிறது.

தவிர, தமிழ் மொழி ஆராய்ச்சிகளை வேற்று மொழியினர் மேற்கொண்டு வருவதையும், தமிழ் மொழிப்பற்று மிக்கபலர் நிறைந்திருப்பதையும் அறிவோம்.

பல வசதியும் வாய்ப்பும் நிறைந்துள்ள பிரித்தானிய நாட்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடை பெற இது வரையும் இருந்து வந்த தடை என்ன?

தமிழ் அறிஞர்களும், தமிழ் அமைப்புக்களும் அதிகரித்து விட்ட படியால், போட்டி, பொறாமை, ஒற்றுமையின்மை போன்றவை கூட்டு முயற்சி மேற்கொள்ள தடையாக இருந்ததா?

அல்லது இப்பாரிய மாநாட்டை யார் நடத்துவது என்ற போட்டியா?

தமிழ் மொழியும், தமிழ்க்கலாச்சாரமும் பல நாடுகளில் வாழும் தமிழர்களை இணைக்கும் பாலமாகத் திகழ்கிறது. அத்தகைய பெருமையும் சிறப்பும் மிகுந்த உலகிலே சிறந்த மொழி என வேற்று மொழி ஆய்வாளர்களால் மகுடம் சூட்டப்பட்ட தமிழ் மொழிக்கு ஆராய்ச்சி மாநாட்டை மிகப் பொருத்தமான இலண்டனில் நடத்த தயங்குவதேன்?

மனிதவளம், பொருள்வளம் நிறைந்த ஐரோப்பிய நாட்டின் ஆதரவுடன் இம் மாநாட்டை நடத்த உறுதி கொண்டவர்கள் முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9வது தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலண்டனில் நடை பெறுமா? என்ற கேள்வி இன்று பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது. இதற்கு நல்லதோர் முடிவெடுக்க தை பிறக்கிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். பிரித்தானிய வாழ் தமிழ் அறிஞர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டிய நல்ல சந்தர்ப்பம் இத்தைத்திருநாளில் உதயமாகிறது.

**********


# New Karai Oli

A Literary, Cultural Social, Economic Publication

**Vol. No.4 Jan-Feb1997**
**Editor: I. Sampanthan**

## Administration

Karai Oli Publication Committee
Flat-1
198 Neville Road
LONDON E7 9QN
United Kingdom

## Publishers:

Chuder Oli Publication Society
**Subscription for 4 Issues**
UK.......................£10
All other countries..£15

Please complete the Form and return to
**Chuder Oli Publication Society**
**Flat-1**
**198 Neville Road**
**LONDON E7 9QN**

**Name**:.................................................................
**Address**...............................................................
**Tel**:.....................................................................
..............................................................................
..............................................................................

Cheque should be in favour of
**Chuder Oli Publication Society**


## வாசகர்களுடன்................

**அன்பான வாசகர்களுக்கு**
**மங்களகரமான பொங்கல் நல் வாழ்த்துக்கள்.**

"காரை ஒளி" திடீரென மறைகிறது; திடீரென ஒளி கொடுக்கிறது என்ற எண்ணம் வாசகர் களிடையே ஏற்பட்டிருப்பதை என்னால் மறுக்க முடியவில்லை. "தமிழ் அகதிகளின் சோக வரலாறு" நூல் வெளியீட்டு விழாவின் பின்னர் - எங்கே உங்கள் காரை ஒளி? என்ன நடந்தது? என்ற கேள்வி. சுருங்கக் கூறின் - பொருளாதார நெருக்கடி தான் முக்கிய காரணம் என நிலைமையை விளக்கிய பின் உற்சாகம் தந் தார்கள்: வாசகர்களும், விளம்பரதாரரும்- "வெளியி டுங்கள் கை கொடுத்து உதவுவோம்" என்றார்கள்.

தை பிறக்கும் வேளையில் நல்ல உற்சாகம் கிடைத்தது. அத்துடன் திரு.பொன் பாலசுந்தரம், கவிஞர் செ. நாகேந்திரன், உரும்பிராய் மனோகரன் மயில்வாகனம் போன்ற சிறந்த எழுத்தாளர்கள் நல்லபடைப்புக்களையும் தந்து "புறாவ்" பார்த்து உதவவும் முன் வந்தார்கள். பலரின் தூண்டு தலால்வெளிவரும் பொங்கல் மலரில் பல்துறை அம்சங்கள் இடம் பெறு கின்றன."லண்டனோ லண்டன்" பால எழுதிய வசன கவிதை தமிழ் ஈழத்தில் எப்படி பொங்கல் என்பதை எடுத்து இயம்புகிறது.

கிராமியக்கவிதை மட்டக்களப்பு நாட்டுப்பாடலை நினைவூட்டுகிறது."தாய் மண்ணை நோக்கி" நீண்ட காலத்திற்குப் பின்னர் தனது எழுத்தை இலண்டனிலிருந்து தொடரும் மனோகரன் மயில் வாகனம் அவர்களது படைப்பு தமிழ் மண்ணை நினைவூட்டுகிறது..

"பெண் எனும் சக்தி"- திருமதி தேவமலர் சிவகுணம் எழுதும் கட்டுரை-"பெண்" தமிழ ருக்கு ஒரு சக்தி என்பதை நிரூபிக்கிறார். தமிழ் சான்றோர்களின்உலகக் கண்ணோட்டம் முனைவர்கி.ர. அனுமந்தன் அவர்களது படைப்பு தமிழரின் பெருமையை உலகளாவிய ரீதியில் எடு த்துக் காட்டுகிறது.

9வது உலகத் தமிழ் ஆராய்ச்சி இலண்டனில் நடைபெறுமா? என்ற எண்ணம் - ஐரோப்பாவாழ் தமிழர்களைச் சிந்திக்க வைக்கிறது. அந்த எண்ணம் நிறைவேற தைத் திருநாள் வழி வகுக்கட்டும். மற்றும் பல அம்சங்கள் இம்மலரை அலங்கரிக்கின்றன.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெங்கலூர் தமிழ்ச்சங்க போசகர் உலகத்தமிழர் சம்மேளனம் உறுப்பினரும் திரு. கும. சண்முகசுந்தரம் அவர்களின் பொங்கல் செய்தி

அங்கே எரிந்து கொண்டிருப்பது அடுப்பல்ல - தமிழீழம்
பொங்கிக் கொண்டிருப்பது அரிசி அல்ல - தமிழர் நெஞ்சம்
வெடித்துக் கொண்டிருப்பது பட்டாசு அல்ல - போராளிகளின் துப்பாக்கி
இப்பொங்கல் நன்னாளில் தளபதியையும் போராளிகளையும் வாழ்த்துவோம்.

உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்
உழவரெலாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்
பல தொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்
பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்
கலகங்கள் போட்டிபகை கடந்தாட்சி நடத்தட்டும்
கல்லாமை கடன்வறுமை களங்கங்கள் மறையட்டும்
நல்வாழ்வை அளிக்கும் மெய்ஞான ஒளிவீசட்டும்
நம்கடமை அறவாழ்வில் நாட்டத்தே சிறக்கட்டும்.

Mr K.M. SHANMUGASUNDARAM
Indian Bank
Devakottai- 630 302

ஈழவர் இன்ரர்நாஷனல் தலைவர்
திரு கந்தையா விக்னேஷ்வரராசா **B.A (Hons)**
அவர்களின் பொங்கல் செய்தி

ஈழத்தமிழர் - தமிழ் நாட்டுத் தமிழர்
ஒன்றுபட பொங்கல் திருநாள்
வழி வகுக்கட்டும் -
தை பிறந்தால் வழி பிறக்கும் -ஈழத்தமிழர் தாய் நாட்டுத் தமிழர் ஒன்று சேர்ந்து பாரதி கண்ட பாலம் அமைக்க இத் தைப்பொங்கல் உதவ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இரு நாடுகள் ஈழம் - தமிழ் நாடு அங்குள்ள மக்கள், சமயரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், பெரியோர்கள் நல்லவர்கள் வழி சமைத்து, தைப் பொங்கல் பொங்கி, வறுமை நீங்கிட வீரம் தழைத்திட ஒற்றுமை வளர இறைவனைப் பிரார்த்தித்து உங்கள் அனைவரதும் அன்பைப் பெற ஆசைப்படுகின்றேன்.

தலைவர் - ஈழவர் இன்ரர்நாஷனல்
EELAVAR INTERNATIONAL
49 Cambridge Road, Moseley,
Birmingham B13 9UE. England.

மதுரைத் "திருக்குறள்மணி" அ.கி. செல்வக்கணபதி எம். ஏ. அவர்களின்

## பொங்கல் வாழ்த்துச் செய்தி

கானவரை விழிஎறிந்து வானவரை அழைக்கும்
கதிரைமலை அருகில்வளர் கான்வத்தலக் குன்று
மானதனைப் பின்சென்று வேடனாக நின்று
மான்மகளாம் வள்ளிமகள் பிறந்தநற் குன்று
யானைமகன் விநாயகரை அழைத்துமே சென்று
யாயும் ஞாயும் கேளாமல் களவுகொண்டான் அன்று
தானவரும் நாரதரும் பாண்டிநாடு வந்து
சண்முகரை மணக்கவைத்த பழையவத்தலக் குன்று!

காரைநகர்ப் புலவரெல்லாம் வழிபட்ட குன்று
கான்குன்றக் குறவரெல்லாம் தினைவிதைத்த குன்று
தேரைமுத்தர் சித்தரெல்லாம் தேடிவந்த குன்று
சித்தியெல்லாம் தருகின்ற கதிரமலைக் குன்று
பாரெல்லாம் போற்றுகின்ற பாண்டிநாட்டுக் குன்று
பந்தவள்ளி மணந்துவந்த பழைய வத்தலக் குன்று
ஏருழவர் ஏத்துகின்ற வள்ளிமலைக் குன்று
இருநாட்டார் போற்றிவரும் இன்பப்பொங்கல் இன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் சமூகத் தமிழ்ப்பணிகளில் ஈடுபட்டுழைக்கும் திரு. த.தவராசா அவர்களின்

## பொங்கல் திருநாள் செய்தி

தமிழர்களுடைய பாரம்பரியம் நிறைந்த திருநாள் தான் பொங்கல்.

எமது சம்பிரதாயங்களும், சடங்குகளும், பழமை வாய்ந்ததும், பெருமை தருவதுமான விழாக்களும் காலத்தால் அழிந்து படாதவை. சொந்த மண்ணைச் சூறையாடத் துடிப்பவர்களுக்கு ஈழத்தமிழர்களுடைய பாரம்பரியங்கள் தெரியாது. அதனால் தான் அடம் பிடிக்கிறார்கள்.

எத்தனையோ "தைகள்" போய் விட்டதாக நாங்கள் ஏங்குகிறோம். எங்கே ஈழம் என்று கூடக் கேட்பது உண்டு. ஆனால் ஒவ்வொரு பொங்கலும் எம்மை எமது ஈழ மண்ணை நோக்கி வீறு நடை போட வைக்கிறதென்பதை மறுக்க முடியாது.

உலகில் நாம் எங்கிருந்தாலும் சரி. ஈழ மண் வளரட்டும் என்று பொங்கல் செய்தால் போதும். எமது மக்கள் வளம் பெற்று வாழட்டும் என்று பொங்கல் செய்வோமாக.

நவீன வசதிகளுடன் புதிய மருத்துவமனை



**ACUPUNCTURE**

**&**

**HERBAL THERAPY**

சகல விதமான நோய்களுக்கும் நவீன மருத்துவ முறை

**Sports injuries *Chronic Back pain *Arthritis*
**Skin problems *Migraine *Headaches *Sinusitis *Allergy*
**Sexual problems *Menstrual problems * Smoking*
**Stress *Sleeplessness *Weight Loss*

**Dr. N.S. MOORTHY** **Ph.D., M.Ac.F., D.A.M.S.**

1079, Garratt Lane,
Tooting Broadway
London SW17 0LN.
Tel: 0850 670 706
0181 682 3876

# இன்று தான் பொங்கல்

பொன் பாலசுந்தரம்




இன்று தான் பொங்கல்
ஈழத்திருமண்ணில்
எரியும் நெருப்பில்
எமக்கென்ன பொங்கல்
என்று கேட்காதீர்கள்
உள்ளக் கொதிப்புடன்
நான் சொல்லுகிறேன்
இன்று தான் பொங்கல்

அந்தக்காலத்துப்
பொங்கல் விழா
இந்த நேரத்தில்
ஞாபகம் வருகிறது
அக்காவின் கடைக்குட்டி
அமுதாவின் பிஞ்சுவிரல்கள்
உள்ளக் கிளறல்கள் போல்
தவழ்ந்து தவழ்ந்து
போட்ட வண்ணக் கோலம்
இன்னுமழியாமல் என்மனக்
கண்ணில் தெரிகிறது

அண்ணன்பையன் அகிலன்
அடம்பிடித்துப்
படையலுக்கு முன்னர்
கரும்பைத் தா என்று
கத்திப் புரண்டது
காதில் ஒலிக்கிறது
பாட்டியின் பாசம்
படமாக விரிகிறது
"குழந்தை தானே
கொடடா மோனை
குற்றமில்லை" என்றதும்
அமுதாவும் அருகில் வந்து
கரும்பின்விருந்தாளியானாள்

தோய்த்து உலர்ந்த
வெள்ளை வேஷ்டியுடன்
அத்தான் வந்தார்
அவர் கையில்
பட்டாசுப் பெட்டி
ஊரையே உசுப்பிவிட
அவருக்கு ஆசை
ஆனால் அவரையே உலுக்கி
விட்டது
அந்தக் குறும்புக் கூட்டம்
பட்டாசு போல அவை
வெடித்த சத்தத்தில்
அத்தானோ ஆடிப்போனார்
"இந்தாருங்கோ, என்னவும்
செய்யுங்கோ" என்று
சரணாகதியானார்.
பொரி பொறுக்க வந்த
மூதாதைக் கூட்டம் போல்

குஞ்சு, குருமானெல்லாம்
கிடைத்ததை அள்ளிக்கொண்டு
அங்குமிங்கும் ஓடியதும் ஞாபகம்
கொஞ்ச நேரத்தில்
அக்கம், பக்கமெல்லாம்
பூமி அதிர்ச்சி.

செங்காரி, பூச்சி
சேர்ந்து உழுது
சீனி அப்பு விதைத்த
விதையின் முதற்கதிரில்
முகராசிக்காறி எங்கள்
மகேஷ்வரிஅக்கா
கைபடக் குத்தி எடுத்த
மணி,மணி, அரிசி – சுளகில்
அம்மாவின் கழுத்தில்
அக்காவின் மூக்கில்
அத்தையின் காதில்
அழகு தந்த நகைகள்
அத்தனையும் விற்று
வீட்டுக்கு சீதேவியாக
வரட்டும் என்று
வாங்கிய செல்வி
பொங்கலுக்காக
மடி நிறையச் சேர்த்து
வைத்திருந்த கன்னிப்பால்
கண்ணில் தெரிகிறது.

இளநீராக, பின்னர்
தேங்காயாகத்
தந்து விட்டு,இனி
என்ன வாழ்க்கை
என்று இறங்கி வந்து,
பொங்கலுக்கு உதவும்
பாளை ஒரு புறம்,
பொங்கல் பெண்ணின்
மங்கல அணிகள்
இஞ்சியிலை, மஞ்சள்
மாவிலை
உடன் பிறப்புப் போல்
அரிசியுடன் சேர்ந்து
அவியும் பாசிப்பயறு
முற்றிப்பழுத்த தேங்காயின்முதல்
பால்
பற்றுத் தரும் சர்க்கரை
இவை மட்டுமா
எங்கள் மனம்,வீடு,
சுற்றம்,சூழல் நிறைந்து வாழ
நிறை குடம்
அதைத் தாங்கி நிற்கும்
தலைவாழைஇலையில்
அறுகு போல் படர்ந்து
இறுகப்பிணைந்து
வாழ் என்றுணர்த்தும்
அறுகம்புல்லைத்
தாங்கிய

நம்பிக்கை தரும்
தும்பிக்கையான்
திருக் கோலம்
இதற்கிடையில்
சடங்கு, சம்பிரதாயம்,
மரபு, மரியாதை
தவறாமல் கவரிமான்
போல் வாழ்ந்த
பாட்டியின் தளதளத்த
ஆனால் எடுப்பான
குரல் –
கற்பூரம்,சாம்பிராணி
சந்தணம், விபூதியுடன்
ஆரத்தித் தட்டெல்லாம்
அடுக்கடுக்காய்
வைத்தாச்சா?
குத்து விளக்கு
கொழுந்து விட்டெரிகிறதா?
முந்திரிப் பருப்பை
முறுக வறுத்தனியா?
நல்ல நாள் தானே
செல்லப் பிள்ளைக்கு
சிவப்புப் பாவாடை கட்டி விடு
காதிலை, கழுத்திலை
எல்லாம் போட்டு விடு
என் பேத்திக்கு
இப்படி இராமபாணங்கள்
போல் எழுந்தன கேள்விகள்
அப்புவும் வந்தார்
ஈர வேட்டி,இடுப்பில் சால்வை
கட்டவிழ்ந்த குடுமியிலிருந்து
சொட்டிய நீரைத்
தட்டி விட்டு
நேரத்தைப் பாரடி பிள்ளை
பொங்கல் பானை,
அடுப்பில் வைக்க
நல்ல நேரம் பிறந்திருக்கும்
கிழக்கைப் பார்த்து
எங்கள் பொங்கல்
மங்களமாக
பொங்கி வழியட்டும்
என்று சொன்னதும் –
எல்லோரும் உசார் நிலை
எங்கும் சுறுசுறுப்பு
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
எங்கும் ஒலித்தது
கேளுங்கள்!
உங்களுக்கு ஒரு வார்த்தை!!
ஈழ மண்ணில்
நாமெல்லோரும்
இப்படித்தான்
பொங்கல் செய்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை ஒளி
97

எல்லோரும் சேர்ந்து
இன்பமாகப் பொங்கி
மகிழ்ந்தோம்.
இது அன்று
ஆனால் இன்றோ –
அக்கம், பக்கத்தில்
இருந்து அவலக்குரல்கள்
எங்கும் ஒலித்தன
"வாறான்" "வாறான்"
"போடப்போறான்"
எங்கும் அல்லோல கல்லோலம்
மின்னல் வேகம் கூட
பின்னே நின்றது
பதுங்கு குழிக்குள்
பொங்கல் பானையும்
நாமெல்லோரும்
ஒதுங்கிக் கொண்டோம்
சொந்த மண்ணில்
எங்கள் பொங்கல்
வெந்து போச்சு
அப்பு கேட்டார் –
என்னடி மோனை!
எங்கடை மண்ணிலை
எங்கடை நாட்டிலை
எங்கடை வீட்டிலை
பொங்கவும் கூடாதோ?

அன்னம் சொன்னாள்
வம்புக்கு வந்தவனுக்கு
பொங்கலின் பெருமை
புரியாது
ஆக்கிரமித்தால் எம்மை
ஆட்சி செய்யலாமென்று
ஆசைப்படுகிறான்
அதற்கு – நாங்கள் எல்லாம்
வாடி விழும்
மாங்காய் பிஞ்சுகளா!
அப்பு! தை பிறந்தால்
எங்களுக்கும்
வழி பிறக்கும் தானே!






# லண்டனிலிருந்து இன்னொரு அவலக் 'கதைகள்'

1958ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தமிழினம் அனுபவித்து வரும் அவலங்கள் ஒன்றா, இரண்டா? கொலை செய்யப்பட்டு, அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டு, கற்பழிக்கப் பட்டு, விதவைகளாக்கப் பட்டு அன்று கப்பலில் தாயக மண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கதைகள் இன்று வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சிங்கள இனவாதத்தின் காடைத்தனம் எந்தளவுக்கு தமிழினத்தைப் பலிகொண்டு வருகிறது என்பதை




நினைத்துப் பார்க்கும்போது, நெஞ்சு துடிக்கிறது.

சிங்கள வெறிநாய்களின் கோரப் பற்களில் சிக்கிச் சீரழிந்த கதைகள் ஆயிரம் ஆயிரம். அவற்றில் சில சம்பந்தனின் முயற்சியால் தொகுத்து, நூலாக 'தமிழ் அகதிகளின் சோக வரலாறு' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு பக்கத்தையும் படிக்கும்போது இரத்தம் கொதிக்கிறது. இந்தக் கோரங்களுக்குப் பின்னால் அரசியல்வாதிகளும், பௌத்த பிக்குகளும் எந்தளவுக்கு பங்கு எடுத்தக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது.

தொழிற்சங்கவாதியாகவும், அரசியல் வாதியாகவும், சமூகசேவையாள னாகவும், எழுத்தாளனாவும் புகழ்பெற்ற ஐ.தி.சம்பந்தன் நமக்கு நடந்த கொடூரங்களின் சில பக்கங்களை, அத்தியாயங்களை எமது மனக் கண் முன் கொண்டுவந்திருக்கிறார்.

தமிழீழ மக்களைப் பற்றியே சதா சிந்திப்பவர் சம்பந்தன். கடந்த காலங்களின் பெரும் பகுதியை பொது வாழ்வுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர். லண்டனிலிருந்து இப்போது அவர் செய்துள்ள இந்தப் பணி மகத்தானது.

நினைத்த போதெல்லாம் தமிழர்கள் மீது காடைத்தனத்தை நடாத்திப் பழக்கப்பட்டு விட்ட சிங்கள இன வெறியர்களிடமிருந்து நம்மைக் காக்க பிறந்தவர்தான் பிரபாகரனும், அவரோடு தோளோடு தோள் நின்று போராடும் தியாக உள்ளங்களும் என்ற எண்ணமே இந்த நூலைப் படிக்கும்போது மேலோங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சான்றோரின் உலகக்கண்ணோட்டம்

முனைவர் கி. ர. அனுமந்தன்

தமிழர்களிடையே தனிப்பட்ட பண்புகள் பல உண்டெனினும் அவற்றுள் தலை யாயதாக வைத்து எண்ணப்படக் கூடி யது அவர் தம் உலகக் கண்ணோ ட்டம் எனலாம். தாமும், தம் வீடும், நாடும் மட்டுமே வாழ்ந்தால் போதும் என்று நினைத்தவர்களல்லர் தமிழ்ச் சான்றோர்கள். உலகம் நன்கு வாழ வேண்டும். அவ்வுலகத்தோடு நாமும் ஒத்துப் போக வேண்டும். உலக த்துக்கான நம் கடமைகளை ஆற்றி அதனை இன்புறச் செய்து நாமும் இன்புற வேண்டும் என்பதே அவர்தம் தலையாய விருப்பம். நாடு, மொழி, இனம் என்று குறுகிய எல்லைகளைக் கடந்து உலகம் யாவும் ஒரு குடும்பம் என எண்ணியவர்கள் தமிழர்கள்.

"உலகிலுள்ள மனிதர் யாரும்
ஒரு குடும்பம் என்னவே
ஒன்றுபட்டு வாழும் மார்க்கம்
தொன்று தொட்டுச் சொன்னது" 1

என்று நாமக்கல் கவிஞர் கூறியது போன்று சான்றோரிடையே பண்டை நாள் தொட்டு இன்று வரை இத்தகைய அனைத்துலக மனப்பான்மை இருந்து வருவதை நாம் கண் கூடாகக் காண லாம்.

தொன்மை வாய்ந்த சங்க கால த்திலேயே ஒரு புலவர் "எல்லா ஊர் களும் எமது ஊரே எல்லா மக்களும் எமது சுற்றத்தாரே" என்ற பொருளில்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" 2

என்ற பொதுமைக் கருத்தை வெளியி ட்டுள்ளார். மற்றுமொரு சங்க காலப் புலவர் இவ்வுலகில் எங்கெங் கெல்லாம் நல்லவர்கள் வாழ்கின் றார்களோ அந்தந்த இடங்கள் தாம் நல்லவை என்ற பொதுப்படையான கருத்தை

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" 3

என்ற பாடலில் வெளியிட்டுள்ளார். நல்ல சான்றோர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் அந்த நாட்டை நன்னாடு என்று போற்றச் சங்ககாலப் புலவர்கள் தயங்க மாட்டார்கள் என்பது இதனால் நன்கு புலனாகின்றது. வாழிய நிலனே என்று உலகத்தைப் புலவர் வாழ்த் தியுள்ளமை ஈண்டு அறிந்து வியப் புறற்பாற்று. இவ்வுலகில் தாமுண்டு, தம் வீடுண்டு என்று சுயநலமிகளாய் வாழ்வோர் எண்ணிக்கையே அதிகம். அப்படியே எல்லோரும் இருந்து விட்டால் உலகம் நடை பெறாது. அழிந்தொழிந்து விடும். ஆனால் நல்ல வேளையாகத் தன்னலத்தை மட்டும் கருதாது பிறர் நலத்தையும், உலக நலத்தையும் ஓம்பும் சில பெரியோர்கள் இவ்வுலகத்தில் இருப்பதனால் தான் உலகம் தடையின்றி நடை பெற்று வருகிறது என்ற கருத்தை,

"உண்டாலம்மஇவ் வுலகம்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுனர் உண்மையானே" 4

என்ற அருமையான பாடல் மூலம் ஒரு சங்க கால மன்னர் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். தன்னலமற்ற உலக சேவையின் பெருமையை அவர் இதன் மூலம் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

இவ்வுலகுக்கு நீர் வளமும், நில வளமும், தானிய வளமும் மட்டு மிருந்தால் போதாது. நாட்டு நலனுக்காகவே பாடுபடும் நல்ல மன்னர்களே (ஆட்சியாளர்களே) அதன் உயிர் போன்றவர்கள் என்ற பொருளில்

"நெல்லும் உயிரென்றே நீரும் உயிரென்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை உலகம்" 5

என்ற பாடலை மற்றுமோர் புலவர் பாடியுள்ளார். உலகம் என்ற சொல்லைக் கையாண்டி ருப்பதிலிருந்து புலவரின் பொதுமைக் கருத்து நன்கு வெளிப்ப டுகிறது.

உலகப் பொதுமறையான திருக்குறளில் உலகம் என்ற சொல் அடிக்கடி கையா ளப்பட்டுள்ளது. உலகம் எவ்வாறு வாழ் கிறதோ அவ்வாறே வாழ்ந்து உலக த்தாரோடு ஒத்து வாழ்வதே அறிவுடை மையாகும். இவ்வுண்மையை உணரா தோர் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைக் கற்றவரே எனினும் அறிவற்றவரேயாவர் என்பதை,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்பலகற்றும்
கல்லார் அறிவிலாதார் "6

"எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு "7

என்னும் குறள்கள் மூலம் வள்ளுவர் நமக்கு நன்கு வலியுறுத்துகிறார். உலகிலுள்ள உயர்ந்தவர்கள் (உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே) உண்டென்று சொல்வதை இல்லை என மறுப்பவன் பேய்க்குச் சமமானவன் என்பதை,

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து.
அலகையா வைக்கப் படும் "8

என்னும் குறள் மூலம் அவர் நமக்கு எடுத்துக் கூறுகிறார்.

மற்றும் உலகம் இன்புறுவதைக் கண்டு தாமின்புறுவதே கற்றறிந்தார்க்கு அழகு என்ற பொருளில்,

"தாமின் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் "9

என்னும் குறளை வள்ளுவர் நமக்களித்துள்ளார்.

இதே கருத்தை இடைக்காலத்தே வாழ்ந்த நம் நாட்டுச் சித்தர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளார்கள்.

"யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்"10

என்றார் சித்தர்களிலெல்லாம் மூத்த சித்தரான திருமூலர்.

தனக்குக் கிடைத்த உணவைக் காக மானது எப்படிக் "கா கா" எனக் கரைந்து ஏனைய காகங்களையும் அழைத்துப் பகிர்ந்து கொள்கிறதோ அவ்வாறே தாமும் தாம் பெற்ற பேரின்பத்தை உலகினர் யாவரும் நுகர வேண்டுமென்று விரும்புவதாக இடைக் காலத்தே வாழ்ந்த தாயுமானவர் என்ற சித்தர் பாடியுள்ளார்.

"காக முறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரச்சிவ
பாக மெனும் பேரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்ப்
ஏக உருவாய்க் கிடக்குதையோ
இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்கே
சேர வாருஞ் சுகத்தீரே "11

என்றும்,

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே 12

என்றும் அவர் பாடியுள்ளதிலிருந்து அவரது கருணை உள்ளம் நன்கு நமக்குப் புலனாகிறது. மற்றும் அவர்,

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"13

என்று பாடி உலகிலுள்ள மக்கள் மீது மட்டுமன்று உயிரினங்கள் அனைத்தின் மீதும் தமக்குள்ள அன்பை வெளிப் படுத்தியுள்ளார்.

இது போன்றே 19 ஆம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த வள்ளலாரும்,

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும் " 14

என இறைவனிடம் வேண்டுகோள் விடுக்கிறார். அதனோடு தாம் அரிதின் முயன்று பெற்ற மரணமிலாப் பெரு வாழ்வையும், பேரின்பத்தையும் உலகினர் யாவரும் பெற வேண்டுமென அன்னாரை அவர் கூவி அழைக்கின்றார்.

"வம்மின் உலகியலீர் மரணமிலாப் பெரு வாழ்வில்
வாழ்ந்திடலாங் கண்டீர் " 15

என்றும்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித்தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீ ரழிதலழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே " 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அவர் பாடியுள்ளார்.

இதே கருத்தையே இக்காலத்தே (20 ஆம் நூற்றாண்டு) வாழ்ந்து சென்ற நாமக்கல் கவிஞரும் நன்கு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

"எம்மத மாயினும் சம்மதம் என்பதை
ஏந்தி நடப்பது தமிழ்நாடு "17

"மற்றொரு மதத்தையும் போற்றிடும் பெரு ங்குணம்
மதமெனக் கொண்டவர் தமிழர்களே" 18

என்றும் அவர் தமிழர்களின் சமயப் பொறைக் கொள்கையை எடுத்துக் காட்டியுள்ளார்.

மற்றும் உலக மக்களனைவரும் ஒரே குடும்பத்தினர் போல் வாழ வேண்டும். தமக்குள் சண்டையிடக் கூடாது. அவ்வாறு சண்டை எழாமல் இருக்கக் காந்திய வழியே சிறந்தது என்று நல்ல பல கருத்துகளை அவர் ஆங்காங்கே கூறியுள்ளார்.

"மனிதர் யாவரும் ஒருசாதி
மாநிலம் மெங்கனும் ஒருநீதி" 19

"எல்லாத் தேசமும் எமக்கினி உறவாம்
எவரும் செய்திடும் நன்றியை மறவோம்" 20

என்ற பாடல் வரிகள் கவிஞரின் உலக ஒருமைப்பாட்டுக் கருத்தை நன்கு வற்புறுத்தியுள்ளதைக் காணலாம். மற்றும் உலகில் போர் எனும் கொடுமை ஒழிய வேண்டுமானால் காந்திஜியின் அகிம்சா முறையே சிறந்தது என்பதை,

"கலகங்கள் இல்லாமல் உலகெங்கும்
வாழ்ந்திடக் காந்தியின் வழியே கலிதீர்க்கும்" 21

"சத்தியம் சாந்தம் இரண்டு சரக்கைச்
சமனெடை அன்பெனும் தேனில் குழைத்து,
பத்தியம் தெய்வ நினைப்பொடும் உண்டால்
பாருக்குள் பெருக்கும் போரில்லை கண்டீர்" 22

என்றெல்லாம் பாடி நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

1 நாமக்கல் கவிஞர் பாடல்கள்,
லிப்கோ பதிப்பு - பக். 17-18
2. புறநானூறு, 192, கணியன் பூங்குன்றனார்
3. புறநானூறு, 187,ஔவையார்
4. புறநானூறு, 182, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
5. புறநானூறு, 186, மோசிகீரனார்
6. திருக்குறள், 10, 7. திருக்குறள், 426
8. திருக்குறள், 850,
9. திருக்குறள், 399
10. திருமூலர்,திருமந்திரம், பாடல்147
11. தாயுமானவர் பாடல்கள், அதிகாரம் 30, காடுங்கரையும், செய்யுள் எண் 3
12. தாயுமானவர் பாடல்கள்,பராபரக்கண்ணி 221,
13. தாயுமானவர் பாடல்கள், 65
14. திருவருட்பா திருஆயிரம், விண்ணப்பம் 20,
15. திருவருட்பா, ஞானசரியைபாடல் 3
16, மேலது பாடல் 12,
17.நாமக்கல் கவிஞர் பாடல்கள் ப. 31, 32
18. நாமக்கல் கவிஞர் பாடல்கள் ப. 32,
19. நாமக்கல் கவிஞர் பாடல்கள் ப. 267
20. மேலது ப. 273, 21. மேலது ப. 369, 22. மேலது ப. 182
(நன்றி - எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர்)

JR Print
* தரம் * மலிவு * வேகம்
இவற்றிற்கு ஜே ஆர் அச்சகம்
எம்மிடம் 500 இற்கும் மேற்பட்ட அழகிய வண்ண வண்ண திருமண அழைப்பிதழ்கள், பிறந்த நாள் வாழ்த்து அழைப்பிதழ்கள் மற்றும் திருமணத்திற்குத் தேவையான Cake Boxes, Short eat bags, பொலித்தீன் பைகள், தலைப்பாகை Rich Cake அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
JR Print
அதுமட்டுமா,
Letter Heads, Book lets, Invoices, Receipt Pads, Souvenirs, Visiting Cards, Raffle Tickets, Menu Cards, Leaflets, Labels, Fax, Rubber stamps etc.....
57 Boundary Road
Walthamstow London E17 8NQ
Tel: 0181 503 6643
Fax: 0181 923 6643
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கப்படும்

பெண்ணின் பெருந்தக்க யாவுள?
— திருக்குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனின் தனிப்பண்பு

அறிஞர் அண்ணா - 2வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில்
ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி

"முன்பு மாநிலம் ஆண்ட தமிழர் மீண்டும் அரசாளும் நாள் வருமா?" எனக் கேட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், "தமிழர் அரசு வரும்" என்று தித்திப்பான சேதியைக் கூறினார். தமிழர்கள் தங்கள் அரசைப் பெற்றிருக்கிறார்களா? - என்பது விரிவாக விவாதிக்க வேண்டிய பொருள். ஆனால் ஒன்றை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்; தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கி விட்டார்கள்.

தமிழனின் பண்பு - யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பது அல்ல. யாரையும் தாழ்த்துவது அல்ல. தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு நாளும் ஒருப்பட மாட்டோம்!

முன்பிருந்த மன்னர்கள் அலை கடலை வென்றார்கள். நம்முடைய வணிகர்கள் நாவாய்களில் (கப்பல்களில்) ஏறிக்கொண்டு, மாரீ தீவுக்கும், பிஜித் தீவுக்கும், மடகாஸ்கருக்கும் சென்று தமிழ் மணம் பரப்பினர் என்று இப்போது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் இந்தச் செய்தியை நமது பழம்பெரும் இலக்கியங்கள் வெகு நாள்களுக்கு முன்பே கூறியிருக்கின்றன.

தரணி மெச்ச வாழ்ந்தோம் ஒரு நாள்!
தாரணியிலிருந்து யார் - என்ன-
கொடுப்பார்கள் என்று ஏங்குகிறோம் இன்று!

ஞாயிறாகத் திகழ்ந்தோம் அன்று
இருட்குகையில் சிக்கித் தவிக்கிறோம் இன்று!

PIA
Personal • Investment • Authority

3 THE ORCHARD,
WICKFORD, ESSEX,
SS12 0HB. ENGLAND.

DON'T SIGN
ANYTHING UNLESS
YOU SEE THIS SIGN

INDEPENDENT FINANCIAL ADVISER

Rama

Tel: (01268) 766624
Mobile: (0956) 369557
Fax: (01268) 561805

Only an Independent Financial Adviser works for you in recommending the best life assurance, pensions or unit trusts on the market.
To be sure you get the best deal, contact us.

with
BEST COMPLIMENTS FROM

Rama & Company
INDEPENDENT FINANCIAL ADVISERS
'Regulated By The Personal Investment Authority'

INDEPENDENT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் எனும் சக்தி

**திருமதி தேவமலர் சிவகுணம் B.A.,**

முற்போக்குக் கருத்துக்கள் பல முதன்மை பெற்று வரும் இக்காலத்தில் கூட பெண் சுதந்திரம் பெண்ணுரிமை பற்றி பெரும் சர்ச்சைகளும், விவாதங்களும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சர்ச்சைகளும் விவாதங்களும் எழுவதற்குரிய காரணத்தை உற்று நோக்கின் இவற்றுக்கு அவசியமே யில்லை என்பது அறிவாற்றல் மிக்கோரின் ஒரே பதிலாக இருக்கும். ஏனெனில் வெள்ளிடை மலையாகத் தெளிந்த காட்சி ஒன்றுக்கு மேலும் விளக்கமேன்? விவாத மேன்? "பெண் என்பது சக்தி" எனும் உண்மை அன்று முதல் இன்று வரை ஏற்கப்பட்டு விட்ட உலகளாவிய உண்மை. இவ்வாறு ஏற்கப்பட்டு விட்ட ஒரு விடயத்தைக் குறித்து மேலும் விவாத ங்களில் நேரத்தைச் செலவழித்தல் தேவையற்ற ஒரு அலுவல் என்பது அறிஞர் பலரின் கருத்து.

"எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ணமடா"

என்று உலகில் உள்ள சக்தியெல்லா வற்றையும் பெண்ணுருவமாகவே கண்டான் புலவன் ஒருவன். உயர்ந்தவை, சிறந் தவை, சக்தி வாய்ந்தவை எல்லாம் பெண்ணாகவே அவனுக்குப் புலப்பட்டி ருக்கின்றன. உலக நாயகி, மஹாலஷ்மி என்றெல்லாம் பெண் எனும் சக்தி போற்றப்படுகிறாள். முழு முதற்கடவுள் சிவனிலே பாதி பெண் என்னும் சக்தியே என வணங்கப்படுகிறாள்.

பெண் என்பவள் உடல் வலுவைப் பொறுத்தவரை ஆண்களை விட வலுக்குறைந்தவள், நொய்தானவள் என நீண்டகாலமாக நம்பப்பட்டு வந்தது. ஆனால் அதற்குக் கூட விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் ஏதுமில்லையென அண்மைக்கால ஆராய்வுகள் கூறுகின்றன. அடுத்த நூற்றாண்டு நடுப்பகுதியில் நடை பெற இருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பெண்களே ஆண்களிலும் கூடிய முதல் இடங்களைப் பெறுவர் என விளையாட்டுத் துறை நிபுணர்கள் தெரிவிப்பதாக அண்மையில் அமெரிக்க நாட்டில் நடை பெற்ற ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அதாவது, உடற்பலத்தைப் பொறுத்தவரையிலும் பெண்கள் கூடிய சக்தியைப் பெற்று வருவது இதற்குரிய காரணமாகும். பெண்களால் முடியாது என்று முன்னர் கூறப்பட்ட குத்துச் சண்டை, உதை பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்கள் எல்லாம் தற்காலத்தில் வீரசாகசங்களுடன் பெண்களால் விளையாடப்படுகின்றமை அனைவரும் அறிந்த விடயமே. இருதய நோய்களும், நரம்புத் தொகுதி சம்பந்தமான நோய்களும்,

இன்னும் பலவகையான தொற்று நோய்களும் ஆண்களையே அதிகமாகத் தாக்கு வதாகவும் பெண்களைத் தாக்குவது குறைவு என்றும் மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றமையும் இங்கு குறிப் பிடத்தக்கது. எனினும் பெண் என்பவள் தனித்தியங்க முடியாதவள், பிறரை எப் போதும் சார்ந்து நிற்பவள் எனும் கருத்து நீண்ட காலமாக எமது சமூக அமைப்பில் நிலை பெற்று வந்துள்ளது. பெண் இளமையில் பெற்றோரிலும், மணவாழ்வில் கணவனிலும் முதுமையில் பிள்ளைகளிலும் சார்ந்து நிற்பவளாகக் கூறப்படுகிறாள். இதன் உண்மை நிலையினை ஆராயின் எந்தக் குழந்தைக்கும் அது ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, அது வளர்வதற்குப் பெற்றோரில் சார்ந்து நிற்பது அவசியம். ஆனால் அனுபவரீதியாக சிறுபிள்ளைப் பருவத்தில் கூட வீட்டுக் காரியங்களில் பெற்றோருக்கு உதவுவது தம்பி தங்கைகளைப் பராமரிப்பது போன்ற வேலைகளில் பெற்றோருக்கு அனு சரணையாக இருப்பது ஆண் குழந்தை களை விடப் பெண் குழந்தைகளே என்பது புரிய வரும்.

இதனாலேயே பல ஆண் குழந்தைகள் இருந்தாலும் ஒரு பெண் குழந்தையாவது இருக்க வேண்டும் எனப் பல பெற்றோர்கள் விரும்புகின்றனர். கன்னிப் பருவத்தினை அடைந்த பெண்ணை ஒரு கணவன் கையில் ஒப்படைப்பது பெரும் பொறுப் பானதும், கஷ்டமானதுமான காரிய மாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது. இது பெண்ணு க்குச் சமூகம் செய்யும் ஓர் அநீதியே ஒழிய, பெண் எந்த வகையிலும் ஆணுக்குக் குறைந்தவளல்ல என்பதே உண்மை. தமது சுயநலத்துக்காகவும், சுகபோகத் திற்காகவும், பெண்ணை அடிமைப்படுத்தி, கல்வி பெற வைக்காது மடமைப் படுத்தி கீழ்மைப்படுத்திய ஆண் சமூகத்தினராலே சீதனம் எனும் கொடுமைக்கு ஆளாகிய பெண் அதற்காகப் பிறரைச் சார்ந்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உட் படுத்தப்படுகிறாள். சீதனம் என்ற விஷ நோயை விடுத்துப் பார்க்கும் போது பெண் எவரையும் சார்ந்து நிற்க அவசிய மில்லாதவள் என்பது கண் கூடு.

வளர்ந்து விட்ட பெண்ணொருத்தி வளர்ந்து விட்ட சக்தி. அதுவே உலகினை வாழ வைக்கும் சக்தி. மனைவியாக, தாயாக, தாதியாக, அமைச் சனாக, ஆசானாக, வழிகாட்டியாக வாழ் வைச் செழிப்புற வைக்கிறாள் பெண். "மங்கலம் என்ப மனைமாட்சி". பெண் இல்லா வீடு விளக்கற்ற இருட்குகை, வீட்டை விளங்கப் பண்ணுபவள் பெண்ணே.

**"இல்லாள் அகத்திருக்க இல்லாத**
**தொன்றில்லை"**

என்கிறது ஒரு முதுமொழி.

**"மனைமாட்சி இல்லாள்கண்**
**இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித்தாயினும் இல்"**

என்பது வள்ளுவர் வாக்கு.

ஒருவனது வாழ்வு எத்துணை சிறப்புடை யதானாலும் நல்ல மனைவி அவனுக்கு அமையாவிடின் அவனது வாழ்வில் எவ்வித பயனுமில்லை என்பதே இதன் பொருளாகும். எனவே ஒருவனது வாழ்வைச் சிறப்படைய பயனடைய -பெருமையடைய வைப்பவள் பெண் எனும் சக்தியே. "வெற்றி பெற்ற எந்த ஆணுடைய வாழ்விலும் அவன் வெற்றியின் பின்னணியாய் இருப்பவள் பெண்ணொருத்தியே" என்பது அறிஞர் பலரது கருத்தாகும். உலகிலே புகழ் பெற்ற வீரர்களை, அறிஞர்களை, தியாகிகளை உருவாக்கிய பெருமை பெண்களுக்கே உரியது. வெறும்

சிவாஜியை வீர சிவாஜி ஆக்கியது அவன் தாய் எனும் சக்தியே. இந்திய மண்ணின் விடுதலைப் போரிலே தன்னைத் தியாகத்தீ ஆக்கிய மகாத்மா காந்தியின் வாழ்வை வழிப்படுத்திய பெருமை அவரது தாய்க்கும், கைகொடுத்துதவிய பெருமை அவரது மனைவி கஸ்தூரிக்குமே உரியது.

பெண் என்பவளின் சக்தி பெருமிதத்துக் குள்ளாகும் மாபெரும் நிலை அவளது தாய்மை நிலையே. தாய்மை என்பது பெண்ணுக்கே இயற்கை அளித்த சக்தி. இறைவன் அளித்த சக்தி. எவ்வளவு தான் ஆணினம் தன் பெருமைகளைப் பீற்றிக் கொண்டாலும் ஒரு குழந்தையைப் பெறும் பேறு பெண்ணுக்கே உண்டு. உலகிலே தோன்றிய எவரும் ஒரு பெண்ணிடமே தோன்றியவர். உலகினை கட்டியாளும் மன்னனேயானாலும் அவன் தாய்க்கு மகனேயாவான். தாய் எனும் சக்தியே உலகினை ஆள்கிறது.

பெண் உருவினை ஒருவன் தெய்வமாக வழிபடுகிறான் என்றால் பெண் எனும் சக்தி ஒருவனது உள்ளத்தை, உணர்வுகளை எவ்வளவுக்கு ஆட்சி செய்கிறாள் என்பது உணர வேண்டிய ஒன்று. பண்டு முதல் இன்று வரை தமிழர் போற்றும் கல்வி, செல்வம், வீரம் முதலிய எல்லாம் பெண் தெய்வங்களாகவே வழிபாடு செய்யப் படுகின்றன.

**"தாயிற் சிறந்ததொரு**
**கோவிலுமில்லை"**

என்பதெல்லாம் கோவிலை விட - அதில் வாழும் தெய்வத்தை விட - தாயே சிறந்தவள் எனும் கருத்தை வலி யுறுத்துகின்றன.

பெண்ணுக்கேயுரிய தாய்மையும், பொறு மையும், சகிப்புத்தன்மையும், அவளது சக்தியின் ஆணிவேர் ஆகும். தனது கணவனை - குழந்தைகளை தன் கருத்திலே வைத்துக் காக்கிறாள் பெண். அவர்களது நல்வாழ்வுக்காகத் தன் சுகத்தைத் தியாகம் செய்கிறாள். இன்று உலகிலே ஆசிரியர் - தாதிமார் பணி களுக்குப் பெரிதும் சிறந்தவர் பெண்களே என்கிறது புள்ளி விபரங்கள். மனைவியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த கணவன் தன் குழந்தைகளை வளர்க்க வழி தெரியாது திண்டாடும் போது, கணவனை இழந்த பெண் தன் குழந்தைகளுக்குத் தந்தை யில்லாக் குறையே தெரியாது வளர்த்து ஆளாக்கு வதும் பெண்ணினத்தின் பெருஞ் சக்தியல்லவா. தாய் என்பவள் ஒருவனது வாழ்விலே எத்துணை முக்கியமானவளோ அது போன்றதுவே அவனது நாடும் மொழியும். இதனாலேயே தாய்நாடு, தாய்மொழி என்று அவை தாயை அடை மொழியாகக் கொண்டு அழைக்கப்படு கின்றன.

வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்கள், கஷ்ட நஷ்டங்கள் முதலியவற்றை எதிர்நோக்க முடியாது, ஆண்கள் விரைவிலே சோர்வ டைகின்றனர். சில வேளைகளில் தற் கொலைக்கும் துணிகின்றனர். ஆனால் இவற்றிலே எதிர் நீச்சல் போடும் மனத்துணிவும், பொறுமையும் பெண்ணு க்கே உண்டு. வயது முதிர்ந்த ஆண்கள் நாற்காலிக்கு சுமையாக இருக்க, பெண்கள் அறுபது வயதிலும் சமையல், பேரக் குழந்தைகளைப் பராமரிப்பது போன்ற குடும்ப வேலைகளைச் சளைக்காது செய்து வருகின்றனர். தற்காலத்திலே பெண்கள் ஈடுபடாத துறைகளே இல்லை என்று கூறுமளவிற்கு அவளது சக்தி மிகுந்துள்ளது. வர்த்தகத்துறை, ஆட்சித் துறை முதலிய அறிவியல் சார்ந்த துறை களிலெல்லாம் பெண்ணெனும் சக்தி பெருகி வருகிறது.

இவ்வாறு பெண் எனும் சக்தி மனிதனது நல்வாழ்வுக்கு - முன்னேற்றத்திற்கு எத்துணை அவசியமானவள் என்பது தெளிந்த ஓர் உண்மையாகப் புலப்படும். இதனாற் தான் "மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல

மாதவம் செய்திட வேண்டுமம்மா

"என்று பாரதி பாடினானோ!!

**தமிழர்களின் நினைவில் என்றும் அகலாத சோகவரலாற்றைக் கொண்டதும், யூலை 83 இனி கொடூரச் சம்பவங்களை அனுபவித்தவர்கள் வாயிலாக வரலாற்றைக் கூறும் நூல்.**

**தமிழ் அகதிகளின் சோக வரலாறு**

Tragic Story of Tamil Refugees

Price of the Book is - £3.00 only.

நூல் பிரதி ஒன்றின் விலை - 3.00 பவுன்கள் மட்டுமே.

எழுதியவர்: ஐ. தி. சம்பந்தன் (மூர்த்தி)

நூல் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

***Chuderoli Publication Society***
Flat 1, 198 Neville Road
Forest Gate, LONDON E7 9QN
Tel: 0181 471 2567

**கம்பியூட்டரில் தமிழ்க்கல்வி**

**ஆரம்ப வகுப்பு முதல் எழுத வாசிக்க உங்கள் குழந்தைகளுக்கு உதவும் ஒரே சாதனம்**

தொடர்புகளுக்கு:
க.சிவகுருநாதபிள்ளை
18 Michales Close
Bickley, Kent BR1 2DX
Tel: 0181 - 289 5871
Fax: 0171 - 919 7557
e-mail: siva@gold.ac.u.k.,

புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
— பாரதி தாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARAM & CO

# SOLICITORS

***Solicitors for all your legal requirements***

* Accident & Compensation Claims
* Civil Litigation & Civil Liberties
* Commercial Litigation
* Personal injuries
* Immigration
* Conveyancing (Residential & Commercial)
* Entertainment Law
* International Transactions
* Legal Aid Cases Undertaken

Segaram House
Colindale
**Tel: 0181 200 3500**

221, Edgware Road
London NW9 6LP
**Fax: 0181 200 1360**

S. Paramalingam B.A.,L.L.M
Assistant Solicitors:
Miss R. Kulasegaram, T.Thanarajasingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்ணை நோக்கி சில சிந்தனைகள்

மனோகரன் மயில்வாகனம்

எனது இனிய நண்பர் சம்பந்தர், தமது "காரை ஒளி"யின் பொங்கல் வெளியீட்டுக்கு, என்னுடைய கட்டுரை ஒன்றைத் தருமாறு அன்புடன் வேண்டுகோள் விடுத்த போது, என்னால் மறுக்க முடியவில்லை.

*1950, 1960* களில் சுதந்திரன், ஈழநாடு, இவற்றில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்துக்குப்பின், அவ்வப்போது ஓரிரு கட்டுரைகள் எழுதியதைத் தவிர, ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு எழுத்துணர்வு என்னை விட்டு விலகி நின்று விட்டது. நீண்ட பெரும் இடை வெளிக்குப் பின்னர் மீண்டும் எழுது கோலைப் பிடிக்க முன்வந்துள்ளேன். "காரைஒளி" என்ற பெயர், என் சிந்தனையைத் தூண்டி விட்டது. தாம் பிறந்த மண்ணுக்கு, தமது சொந்த ஊருக்கு நண்பர் அளித்துள்ள மதிப்பையும், பற்றையும் அது விளக்கி நிற்கிறது. பரந்த உலகைப் பற்றி நாம் அக்கறை கொண்டாலும், எமது பிறந்த ஊரை நாம் மறக்க முடியாது. எனது மனம் எனது சொந்த ஊரைப் பற்றியும், அங்கு சிறுவனாக, இளைஞனாக, மனிதனாக நான் வாழ்ந்த காலங்களைப் பற்றியும் பின்னோக்கிச் செல்கிறது.

எனது ஊர் உரும்பிராய் - இது உரும்பராய் என்றும் அழைக்கப்படும். இன்று வரை இச் சொல்லின் கருத்து எனக்குத் தெரியாது. யாரும் எனக்குத் தெளிவு படுத்தவும் இல்லை. கருத்துத் தெரியா விட்டாலும், அந்தப் பெயரின் மேல், என் சொந்தஊரின் பெயர் என்றபடியால், பற்று உண்டு, பாசமுண்டு. பிறக்கும் குழந்தை முதன் முதலில் "அம்மா" என்று சொல்லும் போது கருத்தை அறிந்தா சொல்லுகிறது?

எங்கள் வீடு, உரும்பிராய்ச் சந்தியில் நடுமையமாக உயர்ந்து நின்ற மாடி வீடு. "நின்ற" என்ற சொல்லின் மூலம், அந்த வீட்டுக்கு என்ன நடந்திருக்கக் கூடும் என்பது சொல்லாமலே விளங்கும். 1937ல் புதுமனை புகுவிழா கண்ட அவ்வீடு, சரியாக 50 வருடங்களுக்குப் பின், 1987ல் இந்திய "வீர"ப் படையினரால் நிர்மூலமாக்கப்பட்டது. எங்கள் வீட்டுக்கு முன்னால் சந்தை. சந்தைக்கு ஒரு பக்கம் பெற்றோல் நிலையம், மறு பக்கத்தில் கடைகள், பின்னால் சங்கக் கடை. எங்கள் கேற்றுக்கு நேர் எதிராகச் சந்தை வளவில், தமிழ் ஈழ விடுதலைக்கு வித்திட்ட இளைஞன் சிவகுமாரனின் சிலை. அந்தச் சிலை பட்ட பாட்டையும், இன்று நாட்டின் நிலை படும் பாட்டையும் எண்ணி ஏங்கத்தான் முடிகின்றது.

எங்கள் வீடு றோட்டுக்கரையில் இருந்தாலும், பின்னுக்கு பெரிய வளவு இருந்தது; இருக்கிறது. அந்த வளவில், நான் சிறுவனாக இருந்த போது, 30 அல்லது 40 தோடை மரங்கள் இருந்தன. பல வகையான மரங்கள் இருந்தன. கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், மத்தளந் தூக்கி, அலரி, கிளிச் சொண்டான், அம்பலவி, செம்பாட்டான் எல்லாம் இருந்தன. பின் வளவு எல்லையில் பாதுகாவலர் மாதிரி நான்கைந்து இலுப்பை மரங்கள். முன் முற்றத்தில் இரு மருங்கும் அடர்ந்து வளர்ந்து உயர்ந்து நின்ற இரண்டு ராட்சத வேப்ப மரங்கள். பின் வளவில் ஒரு மூலையில் தன்னந்தனியே ஒரேயொரு பனை மரம்.

பனை மரத்துக்கு முன்னால் ஒரு புன்னை மரமும், அதற்கும் முன்னால் சரிந்து, வளைந்து கிடந்த முருங்கை மரம் ஒன்றும், இவற்றுக்கெல்லாம் முன்னால், மிகப்பெரிய, பழமை வாய்ந்த புளிய மரம். இரவில் அதற்கு அருகே போகவே பயம். அது போதாதென்று, அங்கே போனால் பேய் பிடித்து விடும் என்ற முதியோரின் வெருட்டல் ஒரு பக்கம். வெள்ளம் வந்தால் புளிய மரத்தடியில் நிற்கும் நீர் தான் கடைசியாக வற்றும். இந்த மரங்களைத் தவிர, நான்கைந்து தென்னை மரங்களும், இரண்டு மூன்று கமுகு மரங்களும், சில மஞ்சமன்னா மரங்களும் நின்றன. பப்பாளி, எலுமிச்சை மரங்களும் சில இருந்தன.

வீட்டுக்கு முன் பக்கத்தில் றோஜா, மல்லிகை, குறொட்டன்ஸ், செம்பருத்தி போன்ற பூச்செடிகள். கேற்றுக்கு அருகே "குவீன் ஓவ் தி நைற் "(Queen of the Night) என்ற "இரவு ராணி மரம்". இரவில் அதன் நறுமணம் அதைச் சுற்றியுள்ள பக்கமெல்லாம் விரவி நிற்கும். பக்கத்தில் போகும் போதும் வரும் போதும் இனிமையான வாசனையைத் தரும். கிணற்றடியில் ஒரு செவ்விளநீர் மரம், ஒரு சிறிய வேப்ப மரம், ஒரு சிறிய கொய்யா மரம், ஒரு விலிம்பிரிக்காய் (Biling) மரமும் நின்றன. இந்த விலிம்பிரிக்காய் மரத்தின் பழம் புளிப்பானது. இதைச் சொதிக்குப் போட்டால் ருசியாக இருக்கும். இந்த மரமும், வளவின் தெற்குப்பக்கத்தில் வேலியோரமாக நின்ற நாவல் மரமும் பள்ளிச் சிறுவர்களின் சூறையாடலுக்கு அவ்வப்போது இலக்காகும்.

இந்தப் பெரிய வளவுக்கு ஏனோ தெரியாது, எனது பெற்றோர் மதில் கட்டாமல் விட்டு விட்டார்கள். வருடா வருடம் மூன்று பக்கமும் - முன்பக்கம் கேற்றுடன் மட்டும் நீண்ட மதில் - கிடுகு மேய வேண்டியிருந்தது. வேலியில் முள்முருக்கை, சீமைக்கிழுவை, பால் கிழுவை, மஞ்சமன்னா போன்ற மரங்கள் இருந்தன. பின் வேலியில் வழக்கமாக ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டு விட்டு விடுவோம். எங்கள் வீட்டுக்குப் பின்னாலுள்ள பல வீடுகளிலுமிருந்து, ஓரளவு தூரத்திலிருந்து கூட, பலர் பெரும்பாலும் வயதானவர்களும், பெண்களும் அம்பொட்டு வழியால் தான் சந்தைக்கும், கடைக்கும் வருவதும், போவதுமாக இருப்பார்கள். ஆகவே, எங்கள் வீட்டுக்கு முன்னாலும் பின்னாலும் எப்போதும் ஒரே நடமாட்டமும் கலகலப்பும் தான்.

எங்கள் வீட்டில் எந்த நேரமும் நிறைய ஆட்கள் இருப்பார்கள். உரும்பிராய் எனது அம்மாவின் ஊர். அவரின் உற்றார், உறவினர்கள் ஊரில் அநேகர். சகோதர, சகோதரிகள், மாமாமார், மச்சான்மார், குஞ்சியப்புக்கள், குஞ்சாச்சிகள், ஆச்சி, அப்பு, பெத்தாச்சி என்று பல்வேறு சொந்தக்காரரும் பகலோ, இரவோ எந்த நேரமும் எந்தப்பக்கம் பார்த்தாலும், அவர்களில் சிலரையோ பலரையோ சந்திக்க வேண்டி ஏற்படும். எனது பெற்றோர் இருவரும் கல்லூரி அதிபர்களாக இருந்தவர்கள். எனது அம்மாவின் குடும்பத்தில் அவரும், அவருடைய அக்காவும் - பூவம்மா என்று நாங்கள் பிள்ளைகள் அவரை அழைப்போம் - தான் அவர்கள் கிராமத்திலும், சுற்று வட்டாரத்திலும் முதன் முதலில் படித்துப் பட்டம் பெற்று ஆசிரியத் தொழில் பார்த்த பெண்கள் என்ற பெருமை வாய்ந்தவர்கள். எனது பெற்றோர் இருவருமே கொடை வள்ளல்கள். ஆகவே, எமது வீட்டில் உறவினர், உற்றார், நண்பர், அயலவர் அனைவரும் எவ்வித கூச்சமுமின்றி நடமாடினார்கள்; தங்கிச் சென்றார்கள்.

அது மட்டுமல்ல. கொழும்பில் 1977லும், 1983 லும் இனக்கலவரங்கள் ஏற்பட்ட போது, எமது வீடு கணிசமான தொகை உறவினர்க்கும், நண்பர்களுக்கும் அடைக்கலம் அளித்து மகிழ்ந்தது. நாங்கள் பிள்ளைகள் நால்வரும், எங்கள் பெற்றோர், முக்கியமாக ஐயா, ஏன் இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டினார் என்று சில சமயங்களில் முணுமுணுத்தது உண்டு. கலவர காலங்களில் எத்தனையோ குடும்பங்களுக்கு அது நிழல் கொடுத்த போது தான், அந்த வீட்டின் பெருமைத்தின் அருமை எமக்கு விளங்கியது. ஊரை நோக்கிச் சென்ற எனது மனம் எனது வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. அதிலும் அவ்வளவு தவறில்லை என்று தான் எனக்குத் தோன்றுகிறது. இந்திய அமைதிப் படை என்றழைக்கப்பட்ட கொலைப்படையினர்க்கும் தமிழின விடுதலை இயக்கத்தினராகிய விடுதலைப் புலிகளுக்குமிடையே 1987-1989ல் நடைபெற்ற போரில் எங்கள் வீடும் ஒரு முக்கிய பங்கினை வகித்தது என்றால் மிகையாகாது.

அண்மையில் எமக்குக் கிடைத்த செய்தியின்படி அந்த வீட்டை - எஞ்சிய வீட்டையும் வளவையும் - இராணுவ அரணாக மாற்ற இலங்கை இராணுவம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. ஏதோ எப்படியோ, எமது தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் எமது வீட்டுக்கும் வளவுக்கும் ஒரு தனி இடம் கிடைக்கும் என்றே தோன்றுகிறது. ஊரைப் பற்றியும், அங்கு நான் கழித்த ஐம்பது வருட வாழ்க்கையைப் பற்றியும் நான் எழுதப் புகுந்தால் அது ஒரு நீண்ட காவியமாகி விடும் என்பதை இக்கட்டுரையை எழுதத் தொடங்கிய பின்னரே உணர்கிறேன். ஆகவே, எனது கட்டுரையை இந்த அளவுடன் நிறுத்தலாம் என்று நினைத்தாலும், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பற்றிய சில வார்த்தைகளையும் எழுதி விட்டால் மனம் நிறைவு பெறும் என எண்ணுகிறேன்.

விடிந்தால் தைப் பொங்கல் என்ற நினைவில், முதலிரவு நித்திரை வராமல் மனம் ஆவலுடன் மறுநாளை எதிர்பார்த்து துடித்துக் கொண்டிருக்கும் நிலை இப்போதும் மனக் கண் முன் நிற்கிறது.

விடிந்தபிறகு, கேட்க வேண்டுமா குதாகலத்தை! வீடுகளில் எல்லாம் மாக் கோலங்களும், மாவிலைத் தோரணங்களும், பொங்கற் பானைகளும் அவற்றில் பொங்கி வழியும் பாலும், சூரியனை நோக்கிய நமஸ்காரமும், வீட்டிலும் வீதியிலும் பட்டாசு வெடிகளின் சத்தமும், கோயிலுக்குச் செல்லும் மக்கள் கூட்டமும், பட்டுப் பூச்சிகளென பாவாடை, சட்டை, காற்சட்டை, கோட்டுடன் ஓடித்திரியும் சிறுவர்கள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களின் வருகையும், விருந்தோம்பலும், அன்பும் நட்பும் கலந்த பரிமாறல்களும், ஊரெங்கும் ஒரே சந்தோஷமும், கலகலப்பும் கொண்டாட்டமுந்தான்.

இந்தப் பசுமையான நினைவுகளின் பின்னணிகளில், எமது ஊரின், பிறந்த மண்ணின் இன்றைய நிலையையும், எமது பிள்ளைகள், அவர்கள் பிள்ளைகள் என்று வரப்போகும் சந்ததியினரையும், அவர்கள் அனைவரது எதிர்காலத்தின் போக்கு எப்படியோ என்பதையும் பற்றிய ஏக்கம், கருமேகம் போல் நிழலாடுகிறது.

அடுத்த தைப் பொங்கலுக்கு முன்னால், எமது மக்களின் வாழ்வில் நல்லதொரு மாற்றம் நிகழ்ந்து, இறைவன் அருளால் ஒளி பிறந்து, அவர்கள் தமது சொந்த மண்ணிலே சுதந்திர மக்களாக வாழ வழி பிறக்க வேண்டுமென இன்றைய நாளில் பிரார்த்திக்கிறேன்.

தொடர்ந்து வெளிவருகிறது
தமிழ் ஓசைகள் - 97
முதன் முறையாக 1994ல் வெளியிட்ட போது பத்திரிகைகளினாலும், வானொலிகளினாலும் பாராட்டப்பட்டது. இப்பொழுது மேலதிக வியாபாரத் தகவல்களுடன் தயாராகிக் கொண்டிருக்கிறது. கலை, இலக்கிய, சமூக அமைப்புகளின் விபரங்கள் இலவசமாக இடம் பெற உடனே தொடர்பு கொள்ளுங்கள்
**British Tamil Directories**
**52 Kingsley Road, London SW19 8HF**
**Tel:0181 543 2126**
**Fax: 0181 540 3442**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டனில் நடைபெற்ற "தமிழ் அகதிகளின் சோக வரலாறு" நூல் வெளியீடு

மேற்படி நூல் வெளியீடு 21-07-96 ஞாயிறு அன்று கிழக்கு இலண்டன் பிளாசற் கல்லூரி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஈழத்தமிழர் வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்தி கறுப்பு யூலையை பூவை ஆதாரத்துடன் எடுத்துக் கூறும் இந்நூலை எழுதியவர் பிரபல தமிழ்த் தொழிற் சங்கவாதியும் எழுத்தாளருமாகிய திரு.ஐ.தி. சம்பந்தன் அவர்கள். சுமார் 400க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்நூல் வெளியீட்டுக்கு பிரபல பத்திரிகை யாளரும், எழுத்தாளருமான திரு. பொன் பாலசுந்தரம் அவர்கள் தலைமை வகுத்தார்கள்.

திரு / திருமதி சிதம்பரப் பிள்ளை அவர்கள் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைக்க, செல்விகள் அமிதா கவிதா தியாகராசா அவர்கள் தமிழ் வாழ்த்து இசைத்தார்கள். சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவரின் வரவேற்புரையை இளம் கலைஞர் திரு. உதயன் அவர்கள் வாசித்தார்கள்.

இலண்டன் முருகன் ஆலயப் பிரதம குருக்கள் ஸ்ரீ நாகநாத சிவம் அவர்களின் ஆசியுரையைத் தொடர்ந்து செல்விகள் துளசி மகேஷ்வரன், சிவானி சிறுவர் உரை இடம் பெற்றது. பிரதம விருந்தினர், பிரபல சட்டத்தரணி எஸ், பரமலிங்கம் அவர்களின் உரையைத் தொடர்ந்து "புலம் பெயர்ந்த **தமிழர்களும் படைப்புக்களும்**" என்னும் விடயம் பற்றி திருமதி, இராஜேஷ்வரி பாலா பேசினார்கள். நூல் பற்றிய கவிஞர் நாகேந்திரன் அவர்களின் கருத்துக் கவிதைகளைத் தொடர்ந்து ஈழகேசரி ஆசிரியர் பாமா இராஜகோபால், நாளிகை / அஞ்சல் ஆசிரியர்- திரு. மகாலிங்கசிவம், சட்டத்தரணி திரு.ப. மயில்வாகனம் ஆகியோரின் கருத்துரைகள் இடம் பெற்றன. நூல் வெளியீட்டுரை- கலசம் ஆசிரியர் திரு. மு. நற்குணதயாளன் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. பிரபல இலக்கியவாதியும், எழுத்தாளருமான திரு. பற்றிமாகரன் அவர்கள் நூல் ஆய்வுரை செய்தார்கள். ஆவரங்கால் சின்னத்துரை அவர்களின் மகன் வசந்தன் சிறப்புரை வழங்கினார். லூாசியம் தமிழர் சமுதாய இளைஞர் மன்றப் பெண்கள் குழு "**பழசும் இளசும்**" என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை மிகக் கச்சிதமாகச் செய்து பெண் குலத்திற்கு பெருமையை ஏற்படுத்தினர். இந் நிகழ்ச்சி மார்க்கண்டன் சட்டத்தரணி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடை பெற்றது. தமிழ் அறிஞரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். ஸ்ரீகந்தராசா அவர்களின் தலைமையில் "புலம் **பெயர்ந்தவர்களின் தமிழ்ப்பணியின்** முதன்மை" **வாழ்விடத்திற்கா? தாயக த்திற்கா?** என்ற தலைப்பில் நடை பெற்ற பட்டி மன்றத்தில் சு. சருவநாதன், திருமதி அன்னலட்சுமி ஜெயபாபு, திரு.வி. இ. இராமநாதன், திருமதி. றிற்றா பற்றிமாகரன், திரு. சிவலிங்கம், திரு. முருகானந்தம் ஆகியோர் பங்கு பற்றினார்கள்.

நூலின் முதற் பிரதியை றில்கோ நிறுவன உரிமையாளர் திரு.த. திலகராசா அவர்கள் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து இலண்டனிலுள்ள பல அமைப்புக்கள் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டன.



தமிழ் அகதிகள் சோகவரலாறு நூல் வெளியீட்டில்

தலைவர்: திரு. பொன் பாலசுந்தரம், இலண்டன் முருகன் பிரதம குருக்கள் – ஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள், திரு இராஜகோபால், பிரதம விருந்தினர்: திரு பரமலிங்கம், திரு/திருமதி சிதம்பரப்பிள்ளை, திரு வி. இ. இராமநாதன் ஆசிரியர்: ஐ.தி சம்பந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே"

# M. Kasippallai & Sons inc.

## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

40 வருட காலமாக ஈழ மக்களுக்குச் சேவை செய்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்..

ஏழு ஆண்டு காலம் எம் துரித பணமாற்று சேவையில் திருப்தியடையும் எம் மககளுக்கு இன்னும் பல புதிய துரித சேவைகளை விரைவில் வழங்கவுள்ளோம்...

1958 இருந்து இன்றுவரை வர்த்தகத்துறையில் எமது ஸதாபனம் பல முன்னேற்றத்தைக் கண்டு முன்னணியில் நிற்கின்றது.
வாடிக்கையாளருக்கு பண மாற்றுச் செய்யும்பொழுது பற்றுச்சீட்டு கொடுப்பதனால் அது உங்களுக்கு வரிக்கழிவினை பெற்றுத் தருகிறது..

எமது ஸ்தாபனத்தின் கிளைகள்

வவுனியா – மட்டக்களப்பு – கொழும்பும் அதன் சுற்றுப்புறங்களிலும் – சிலாபம்
நீர்கொழும்பு – சென்னை – சிங்கப்பூர் – அகிய இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது.

தொடர்புகட்கு:

மு. காசிப்பிள்ளை சக புதிதிரர்கள
M. Kasippallai & Sons Inc.
3228 Eglinton Ave. East, #3
Scarborough Ont. M1J 2H6.
Tel: (416) 267 - 8221.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் அகதிகள் சோகவரலாறு நூல் வெளியீட்டில்
திரு.திருமதி. சிதம்பரப்பிள்ளை குத்து விளக்கேற்றுகிறார்.

யாழ் இந்துக் கல்லூரி உயர்வகுப்பு (A/L)
மாணவனும், (Senior Prefect)
செல்வன் ஞானலிங்கம். சோமாஸ்கந்தமூர்த்தி
பரிசளிப்பு விழாவில் கல்வி அதிகாரியிடமிருந்து
பரிசு பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமியக்கவிதை

**செ. நாகேந்திரன்**

பட்டுப் புடவைகட்டி சிட்டுப் போலே போற பெண்ணே
மட்டுக் கடங்காமல் தவிக்குதடி என்மனசு
கட்டுக்குலையாத கட்டான உன்னுடம்பை
தொட்டு மகிழ்வதற்கு துடிக்குதடி என்மனசு.

ஆட்டு மீசைக்காரா ஈட்டிப் பல்லுக்காரா
தீட்டி வைச்சிருக்கேன் கத்தியொன்று காட்டிடவா
மாட்டு உடம்புக்காரா வெள்ளை வேட்டிக்காரா
மோட்டுத்தனமாக மாட்டிக் கொள்ளாதே.

மொட்டவிழ்ந்த தாமரையில் சொட்டுகின்ற தேனுக்காய்
கொட்டுகின்ற மழையிலும் முட்டிநிற்கும் வண்டினம் போல்
இட்டுச் செல்லுதடி என்கண்கள் என்னை விட்டு
கட்டித் தழுவுதடி என் மனசோ உன்னெழிலை

எட்டுத்திசையிருந்தும் என்னினத்தைக் கூப்பிட்டு
ஈட்டிப்போடப் பண்ணி கூட்டிடுவேன் உன் கண்ணை
வெட்டிப் பேச்சுரைத்துத் திட்டும் வாங்காதே
பட்டியாட்டைப் போலே குட்டும் வாங்காதே

செட்டுக் காட்டாதே எட்டித்தான் ஓடாதே- உன்னை
ஒட்டி மகிழ்வதற்கு ஏங்குதடி என்மனசு
லட்டுக் கன்னத்தை ஒரு தடவை தந்திட்டால்
பொட்டுக் குலையாமல் தந்திடுவேன் முத்தமொன்று

காட்டு பிராண்டிக்காரா காட்டிறியே யுன் குணத்தை
பாட்டியிடம் சொல்லி மாட்டி வைப்பேன் இன்றுன்னை
போட்டி போட்டுக் கொண்டு பெண் பார்க்க வாறாங்க
நோட்டாய் படியெடுக்கும் பட்டணத்து மாப்பிள்ளைமார்.

விட்டுத் தள்ளு உன்னதன் பட்டணத்துக் கொண்டாட்டம்
துட்டுக்காகவல்லோ அலையுது அக்கூட்டம்
கட்டிய தாரத்தையே விட்ட பேரை யெல்லாம்
கூட்டிக் காட்டட்டுமா புட்டுத்தான் வைக்கட்டுமா.

சாட்டுப் போக்கு சொல்லித் தீட்டிறியே என்மனதை
ஏட்டுப் படிப்பு மில்லை நாட்டில் நிலமுமில்லை
மாட்டுப் பண்ணையுண்டா ஆட்டுத் தொழுவமுண்டா
பூட்டுத் திறப்புள்ள வீடுதான் உனக்கு உண்டா.

தோட்டு அழகுக்காரி கூற்றில் வேட்டுக்காரி
தேட்டம் இல்லையென்று சொன்னது யாருனக்கு
சீட்டுக்கட்டி பணம் சேர்த்துத் தாட்டிருக்கேன் - எனக்கு
பாட்டன் தேட்டமெல்லாம் கோட்டில் தீர்ந்திருக்கு.

கூட்டுக் கிளியென்னை வாட்டி வதைக்காதே
நாட்டுச் சனமாரும் பார்த்திடுவார் இவ்விடத்தில்
ஊட்டி போல் குளிர் இருக்கு மெட்டான பாட்டிருக்கு
கிட்ட நீவந்தால் இருவர்க்கும் சூடிருக்கு.

தோட்ட வேலை நேரம் வீட்டில் நானிருப்பேன்
பூட்டுத் திறந்திருந்தால் நாடிவா என்னிடத்தில்
காட்டுத் தீ போலே உடம்பிலின்பம் பரவுதடி
பூட்டும் உடைத்திடுவேன் பூங்கொடியே உனைக்காண.

நீட்டான மீன்வாங்கி கூட்டாக்கிக் குழம்பு வைச்சு
சூட்டோடு வைச்சிருப்பேன் நாட்டரிசிச் சோறாக்கி
மொட்டு மல்லிகையில் உன் கொண்டைக்கு மாலை கட்டி
கட்டழகன் நான் வருவேன் கட்டி மகிழ்வதற்கு.

S.K. TRADING

S.K. TRADING
GASOMETER STR-31
8005 ZURICH
SWITZERLAND
TEL:01 - 2724336
FAX:01 - 273237

(நாதன் கடை)

மங்கையர் மனங்கவரும் டிசைன்களில் சிங்கப்பூர் தங்கநகைகள்
கண்ணைக் கவரும் வண்ணங்களில் திருமணப்பட்டுப் புடவைகள்
சிறுவர் சிறுமியருக்கான ரெடிமேட் உடுப்புகள்
இல்லத்தரசிகளுக்குத் தேவையான சகல மளிகைப் பொருட்கள்
இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி வகைகள், கடலுணவுவகைகள்
அனைத்திற்கும் நாடுங்கள் எஸ். கே. ட்றேடிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் ஒரு தனிநாடா?

சைவமும் தமிழும் வளர்த்த சிவபூமியாக பெயர் பெற்று விளங்கிய **காரைநகர்** இன்று சிங்கள கடற்படையின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு தனி நிருவாகம் கொண்ட நாடாக ஆக்கப்பட்டிருக்கிறது.

வரலாற்றுக் கண்ணோட்டத்திலும், புதை பொருள் ஆய்விலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த இம்மண்ணில் **மகாத்மா காந்தியடிகள்** 1928ல் காலடி வைத்த சமாதான பூமி. **ஈழத்துச் சிதம்பரம்** என்னும் திருத்தலத்தால் சைவ உலகில் பிரசித்தி பெற்ற பூமி. ஆறுகால பூசை நடைபெற்று வந்த இத்திருத் தலத்தில் இன்று ஒரு காலப் பூசை பல கட்டுப்பாட்டுடன் நடைபெறுகிறது. மக்கள் **சுதந்திரமாக** சென்று வழிபட முடியாத நிலை.

நூற்றுக்கு அதிகமான சைவ வழிபாடு நிலையங்களும், 12 பிரசித்தி பெற்ற ஆலயங்களும் நிலை கொண்டுள்ள இந்த சிவபூமியில் பூசை வழிபாடுகள் அற்ற முறையில் ஆலயங்கள் பல சிதைக்கப்பட்டும், மூடப்பட்டுமிருப்பதாக அறியக் கிடக்கிறது. இந் நிலையைப் புலம் பெயர்ந்து வாழும் காரை மக்களால் பொறுக்க முடியவில்லை. 14 தமிழ்ப்பாடசாலைகளும், இரண்டு பெரிய கல்லூரிகளும் அமைந்து கல்வியை வளர்த்து வந்த பூமியில் இன்று 300க்கு அதிகமான மாணவர்களும் ஓர் இரு பாடசாலையில் சில ஆசிரியர்களின் உதவியுடன் கல்வி கற்று வருகின்றனர்.

பல கல்விமான்களையும், தமிழறிஞர்களையும் உருவாக்கிய இந்தப் பூமி இன்று கடற்படையின் நடமாட்டம் நிறைந்த மண்ணாகி விட்டது. தமிழகத் திலிருந்து பல அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும், பேச்சாளர்களும் ஆண்டு தோறும் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் **மணிவாசகர்விழா** வில் கலந்து கொள்வது வழக்கம். தமிழகத்திலிருந்து நூற்றுக்கு அதிகமானவர்கள் கால் வைத்த புண்ணிய பூமி சிங்களக் கடற்படையின் ஆக்கிரமிப்பால் புனிதத் தன்மை இழந்து விட்டது. இந்நிலையை தமிழகத் தமிழர்கள் ஏன் தட்டிக் கேட்கக் கூடாது?

நோர்வே நாட்டு அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவிய **சுனோர்** நிறுவனம் **கப்பல் கட்டுந்தளம்** இருந்தன. காரைநகர் துறை முகத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த இத்தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கானோர் தொழில் புரிந்து வந்த இந்தப் பகுதி அரச படைகளின் குண்டு வீச்சினாலும், தாக்குதலினாலும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டது. சமாதான பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் பேசும் நாடாக பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் நோர்வே நாட்டுக்கு இந்நிலை தெரியும். தற்போது காரைநகரில் வாழும் மக்கள் **பெட்டிப்** பாம்பு போல் அடங்கி வாழ்கின்றார்கள். எந்த வித கலை கழியாட்ட நிகழ்ச்சிகளையும் அனுபவிக்க முடியாது. அங்கொன்று இங்கொன்றாக வாழும் மக்கள் பகல் நேரங்களில் கூடிப் பொழுது போக்கும் வாய்ப்பைத் தவிர தனித்த வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றனர்.

குட்டி **அமெரிக்கா** என்று பெயர் எடுத்த **காரைநகர்** இன்று குட்டி நாடாகி விட்டது. வர்த்தகப் பெருமக்களால் செழிப்புற்று பல மாட மாளிகைகள் அமைந்த இடம் **வனாந்திர பூமி** ஆகிவிட்டது. பல வீடுகள் உடைக்கப்பட்டு பெருமதிப்பு வாய்ந்த பொருட்கள் சூறையாடப்பட்டு விட்டது. தற்போது வெளியிடங்களில் அகதிகளாக வாழ்ந்தவர்கள் பலர் மீண்டும் அங்கு செல்வதாகவும், ஆனால் அவர்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு சந்தேகப் பேர்களாகக் கருதப்படுவதாகவும் தெரிய வருகிறது.

நாலு பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்நகரை இணைப்பது புண்ணாலைப் பாலம். இந்த வழி இன்று பாவனையில் இல்லை. கொழும்பிலிருந்து செல்லும் சிலர் திருமலையிலிருந்து கப்பல் மூலம் காரைநகர் கடற்படைத்தளத்திற்கு சென்று, பல்வேறு கட்டுப்பாட்டுடன் உட் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். தனது சொந்த வீட்டுக்கு சொந்த ஊருக்கும் செல்வதற்கு சிங்களக் கடற்படையிடம் **மண்டியிடுவதுடன்** மட்டுமன்றி தமிழ் குழு ( EPD ) ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டு இருக்க வேண்டிய நிலையும் இம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

காரைநகர் உருவாக்கிய பல கல்விமான்களும் அறிஞர்களும் உலகெல்லாம் பரந்து வாழ்கின்றார்கள். இவர்கள் இந்நிலைப்பாட்டை வெளியுலகிற்கு தெரியப்படுத்தாமல் இருப்பது வருந்தத்தக்கது. இலங்கை அரசுக்கு நெருக்கடியை உருவாக்க தயங்குவதேன்?

இன்று ரெலோ இயக்கத்தின் பேச்சாளர் என்று குரல் கொடுக்கும் சிறீகாந்தா காரைநகரைச் சேர்ந்த ஒரு **சட்டத்தரணி.** ஊர்காவற்றுறை திரு நவ ரத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்ட சுயாட்சிக் கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். சுயாட்சிக் கொள்கை கொண்ட இவர் பின்னர் ஏதோ சந்தர்ப்ப வசத்தால் ரெலோவின் ( TELO ) பேச்சாளராகவும், முக்கியத்தருமாகிவிட்டார்.

இந்த அமைப்பு அரசுக்கு துணை போகிறது என்பது வெளிப்படை. அரசுக்கு துணை போகும் அமைப்பைச் சார்ந்த இந்த சட்டத்தரணி சிறிகாந்தா - தனது பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் ஏன் குரல் கொடுக்க முடியாது? சிங்களக் கடற்படையின் ஆதிக்கத்திலிருக்கும் காரைநகரை சுதந்திர பூமியாக்க, நடவடிக்கை எடுக்க முடியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர பிரித்தானிய நாட்டில் வாழும் சில காரைநகர் வாசிகளால் உருவாக்கப்பட்ட □காரை நலம்புரிச்சங்கம்□ ஒன்று கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கி வருகிறது. காரைநகரிலுள்ள இன்றைய நிலையில் பாரா முகமாக இருப்பதேன்? அல்லல்படும் மக்களுக்காக, தமிழ் இனத்திற்காக இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்ற கேள்வி காரை இளைஞரால் எழுப்பப்பட்டு வருகிறது.

விட பகுதியில் நிலை கொண்டுள்ள அரச படைகளுக்கு உணவும், ஆயுத விநியோகமும் செய்வதற்கு பிரசித்தி பெற்ற காரைநகர் கடற்படைத்தளம் பயன்படுத்தப் படுகிறது. 1984, 85ல் இத்தளத்தை தகர்ப்பதற்கு அன்றைய E.P.R.L.F. இராணுவத்தளபதி டக்கிளஸ் தேவானந்தா தலைமையில் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததால், கடற்படைத்தளத்தை வலுப்படுத்திக் கொண்டார்கள். அன்று விடுதலைப்புலிகள் திட்டமிட்டுத் தாக்கியிருப்பார்களேயானால், நிச்சயம் தகர்க்கப்பட்டிருக்கும்.

இன்று வலுவடைந்த கடற்படையினர் காரைநகரை ஒரு தனி நாடாக்கி தனி நிருவாகம் நடத்துகின்றனர். அன்று காரைநகர் கடற்படைத்தளத்தை தகர்த்தெறிய, தலைமை தாங்கிய டக்ளஸ் தேவானந்தா, இன்று அதை இலகுவான முறையில் பதம் பார்க்கலாமே? சந்தர்ப்பத்தை பயன்படுத்தினால், காரைநகர் சுதந்திர பூமியாக மறுபடியும் மாறலாம்.

மலரிடம் மங்கையருக்கும், மதுவிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் அன்பைப் போல, குழந்தைகளுக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகிறது

— அறிஞர் அண்ணா.

MARKANDAN & CO

SOLICITORS

Empowered to Administer Oaths

THAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

*M. Markandan* LL.B.

● Immigration / Home Office ● Refugee – Asylum
Commercial Conveyancing ● Matrimonial
● Licensing ● House / Flat Purchase or Sale
● Representation at Police Stations etc.

LEGAL AID
WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK AND KEEN TO HELP.
TEL: 081-514 8188 FAX: 081-514 8303

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# A HISTORICAL ISLAND

(Continuation from the last issue)

We drank each other's health and long life in the country's wine, and my kindly host went home with the empty bottles.

I stretched myself out on the old Dutch Residency verandah in a long chair, and pulled out Baldaeus from my traveling case.

Ninduntiva, he says-that is to say Delft-or the Long Isle, is called Ilha das Vacas, i.e., the Cow Island, by the Portuguese, because abundance of cattle are transported thither from Tonday, which makes cattle so cheap there that you may buy a good cow for four Dutch shillings; but their oxen and cows are not near so big, as those of the continent of Jaffna patam. Often times a mortality happens among the cattle, because the ground, being hot and dry, produces divers venomous herbs, which they feed upon. The inhabitants are very poor, and live upon miserable diet: I remember that being once eight days in this isle, I and my company could scarce get provisions for our sustenance. The isle is of difficult access, because the shore is rocky, and has no bays, but only a few narrow creeks, where there is no coming in, except in very calm weather; otherwise the sea beats with such force against the rocks, that there is no coming near them, though there be sometimes five or size fathoms of water. For which reason there is no coming at it, except in the calm seasons, which happen twice a year at the change of the monsoons: for the South-wind forces you upon the rocks, and with the North-wind the shore is too shallow to approach it. The Portuguese had formerly a fort here, the ruins whereof are to be seen to this day.

They also brought some horses into this isle, which multiplying in time, produced a certain kind of horses that are very small but hardy and very fit to travel on stony and rocky grounds: they live in the wilderness, and are taken by forcing them into the bank of a river or pond, where they catch them in snares or ropes.

So the longevity of the people of Delft is not only due to toddy, I thought to myself, but it comes of the hardiness of a race that has battled with nature for centuries and won the fight. Flood, and drought, and stormy seas, and the long toil to win food from the unwilling soil, have made of the islanders of Delft the kind of people that do live long.

I went to sleep that night to the music of the wind in the trees, and waves on the coral shore, and the 'regular champ, champ, of the Maniyagar's horse cropping the grass in the field outside the house.

Next morning I went along the road that runs south across the island. It passed through fields of palmyra palms, well-stocked with doves, and all partially flooded. A flock of goats and sheep with long ears and active bodies, came tripping along the road under the care of a tiny bright-eyed girl about three feet high, who stared 'solemnly at the stranger. After a little paddling upon the half-flood road, I came out upon wide grasslands almost entirely covered with water. But where there was a little grass showing through the flood, there I saw five or six of those shaggy, half-wild ponies for which Delft is famous, very small, but hardy, and very fit for travel on stony ground. Some of them were beautiful little animals, lithe and shapely; but most were bent in the back, and protruding in the stomach; and looked as if they had never galloped half a furlong in their lives.

Upon the northern shore of Delft, there lie a few scattered fragments of bricks and cement which are all that is left of the Government Stud Stables where Lieutenant Nolan ruled like an island king. We get used to motor cars, and admit the importance of vast, reeking factories that turn green fields into a wilderness of chimneys in order to supply us with motor cars, and yet, barely thirty years ago, Governors, bishops, planters, merchants, hunters, all in fact who today use a car, traveled behind or upon horses: and then Delft was a very important place, and far more beautiful then, as now, than any motor works.

When the first train ran round Sensation Rock on the way to Kandy, the fate of the mail coach was sealed: and when the early motors cars of 1995 raised the red dust in the streets of Colombo, the days of riding horses were numbered. The motor turned the horse from a necessity into a luxury, and Delft ceased to be important. Perhaps, when the world's petrol supplies run out the hoofs of yearling colts in training will thunder once more on the Horse Plains. Meanwhile there is only a handful of uncouth, bent-backed ponies.

"Nobody ever catches them no", said a shabby old man who came wading over the plain, holding up a dirty rag of a cloth, as he raised his thin, bandy legs out of the water, one at a time, and washed the mud from between his toes, "they just walk and eat".

"Are they wild", I asked him, "or does somebody own them?" He considered for some time, as if he expected that there might be some catch in the question. Perhaps, he thought that I had secret designs of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

carrying away a couple of hairy ponies with pendant stomachs to make a surprise entry for the Governor's Cup.

"Yes", he said firmly, looking at me very straight, "they all belong to somebody, and no one may come and catch them. They just walk and eat".

He waded off 'slip, slop' towards the village, and I went forward paddling through the shallow water that was as warm as a hot bath, and filled with vicious stones that came out and bit at my toes and shins, however carefully I put my feet down into the slippery mud.

The road passed a small tank on the left and a larger one on the right. I could only tell when I was getting near a tank by looking at the map which I carried in my hand, and by the rising of the water from my knees to my waist. A few stunted trees and bushes and the groups of grazing ponies were the only other indications of where the dry land lay when it was in season. The whole place was covered with birds that love the water, sandpipers, green shanks, and flocks of golden plover: they were having a happy time, which plenty of succulent mud to explore: and no doubt the fish were making the most of the opportunity to make excursions far inland to feeding grounds that generally belonged to the birds alone.

After a mile or two, the water sank to my ankles, and I came out at last upon dry land at the fishing camp on the southern coast of the island, where long shallows dotted with coral rocks lead out to the open sea. There were a few low huts built upon the grassy sand bank, with nets laid out to dry before them, and children running in and out, and women working inside.

"Extract from the "Ceylon beaten tract" by Mr. Keble"

எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்
— பாரதியார்.

உங்களுக்குத் தேவையான சகலவித
இலங்கை, இந்திய, ஆங்கிலேய உணவுப் பொருள்களை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

STATION SUPER STORES
OFF LICENCE & GROCERIES
6 STATION PARAD, EAST HAM, LONDON E6 1JD
Tel: 0181-503 4711, Fax: 0181-591 4354

வாடிக்கையாளர்கள் தங்கள் கார்களை நிறுத்துவதற்கு வசதியாக முழு அளவிலான
கிளை நிறுவனமொன்றும் அருகாமையில் திறக்கப்பட்டுள்ளது.

JAFFNA MINI MARKET
Tel: 0181 472 3644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil people do not take package seriously

Minister S. Thondaman

**The Tamil people do not take the government's devolution proposals seriously because they have been offered packages over and over but one of them have been implemented, Ceylon Workers' Congress head and Minister of Livestock Development and Rural Industries, S Thondaman, said in an interview with the Island on 7-01-97**

**Minister Thondaman noted that the Bandaranaike-Chelvanayagam Pact, the Dudley Senanayake Pact and the Indo-Lanka Pact were three such sets of proposals which were never implemented. "The PA government's devolution package is bolder than all of them, but people cannot trust that it will be implemented because much milder ones did not see the light of the day", he said.**

**"The experience of the Tamils have been that everytime something agreeable to them is approved, it is not implemented. I concede that the present proposals are very daring and bold (more than former packages), but are they another eyewash?" he asked.**

**When asked whether the North-East conflict has worsened, he replied in the affirmative. "The conflict has not been brought to an end. In fact, it has spread to other areas, it is all over now. It cannot be solved if both parties do not have peace on their minds", he said. He criticised the government's military offensive saying that a government has the responsibility of preserving law and order but their actions, at present, has "exceeded that".**

**"Now, it is only war. As if foreigners are fighting foreigners", he said. He maintained that Prabhakaran has resorted to arms because his democratic counterparts before him failed to achieve anything for the Tamil people through democracy. However, he said, he is doubtful that the LTTE can be defeated militarily because they seem to excel in guerrilla warfare. "If they were using conventional warfare, perhaps, they may be defeated. But in guerrilla warfare, they are strong", he asserted.**

**Speaking on protests by Tamil parties against the holding of elections in the North and East, he asked, "Why did they not protest during the last elections too"?**

**However, he agreed that it does not seem like the present situation in the North and East is conducive to elections.**

---

பிற மொழிகளுக்கு இல்லாத சொல்வளம்
தமிழுக்குத் தான் உண்டு
— அறிஞர் அண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**In the plantation sector, he noted, there has been "no progress" by the government. The problems of the youth he warned, are growing. They are not absorbed into the estate labour force they are arrested under the Prevention of Terrorism Act, companies are negligent and uninterested in finding a solution to the youth problems. "They are frustrated", he said. He pledged, however, that as head of the CWC, he will ensure that the workers get ownership of their line rooms and garden plots within this year.**

**"it has already been agreed in principle by the government. I will shortly hold a discussion with President Kumaratunga and I will also refer to the position of those workers who do not wish to return to India". he said.**

**(courtesy-Island 7.1.97)**


# V&A TRAVELS

** We Give You The Low Price Travel Tickets All Over the World*

** We Arrange Competitive Travel, Insurance, Hotel Reservation and Car Hire at Very Low Rate Throughout Europe, States and India.*

*Low Quatations for the:*

**Motor Vehicle*

**Building*

**Contents*

*and Commercial Insurance.*

For Details Please Contact any of the Branches below.

140 Hoe Street
Walthamstow
London E17 4QR
Tel: 0181 -509 9896
0181 - 509 0509
Fax: 0181 - 509 2812

176 High Street
Tooting
London SW 17 OSZ
Tel: 0181 - 767 8090
0181 -767 7060
Fax: 0181 - 767 9020

1 A Sibley Grove
Manor Park
London E12 6SD
Tel: & Fax: 0181 -552 7200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1997 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 12 | கேணல் கிட்டுவினதும் தோழர்களினதும் 4ம் ஆண்டு நினைவுநாள்<br>Lloyds park theatre, Walthamstow. |
| மார்ச் | 16 | **T.E.E.D.O.R** இன் **Energy Crisis Seminar**<br>Imperial College |
| மார்ச் | 29 | செஞ்சோலைக் கலை மாலை<br>Acton Town Hall, Ealing |
| ஏப்ரல் | 13 | **LONDON MARATHON** இல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் |
| மே<br>(BankHoliday Sunday) | 4 | யாழ்முரி-97<br>Fairfield Hall, Croydon. |
| மே<br>(BankHoliday monday) | 5 | தமிழர்புனர்வாழ்வுக்கழக உதைபந்தாட்டப்போட்டி<br>Doughlas Eyre Sports Centre, Blackhorse Road |
| மே<br>(BankHoliday Monday) | 26 | **Tamil Cricket Festival**<br>Chingford |
| யூன் | 14,15 | தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடி தினங்கள் |
| யூன் | 28 | தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நடனவிழா<br>Ashcroft Theatre, Fairfield Halls, Croydon. |
| யூலை | 12 | செஞ்சோலைத் துடுப்பெடுத்தாட்டப் போட்டி<br>Warren Farm Sports Centre, Southall. |
| யூலை | 26 | யூலை 83 இனப்படுகொலை நினைவு ஊர்வலம்<br>(இடம் பின்னர் அறிவிக்கப்படும்) |
| ஓகஸ்ட் | 09 | மதுரகானங்கள்-97<br>(இடம் பின்னர் அறிவிக்கப்படும்) |
| செப்டெம்பர் | 06 | **T.E.E.D.O.R.** இன் தளிர் மாலை<br>Camden Town Hall, Camden. |
| செப்டெம்பர் | 27 | லெப்.கேணல் திலீபன் எழுச்சி நிகழ்வு<br>(இடம் பின்னர் அறிவிக்கப்படும்) |
| ஒக்டோபர் | 18 | எழுச்சி கானங்கள்-97<br>Brent Town Hall, Wembley. |
| ஒக்டோபர்<br>நவம்பர் | 30<br>05 | அனைத்துலக கவனஈர்ப்பு வாரம் |
| நவம்பர் | 21-27 | மாவீரர் வாரம் |
| நவம்பர் | 29 | மாவீரர் நாள் நிகழ்வு<br>(இடம் பின்னர் அறிவிக்கப்படும்) |

**நமது தாயக விடிவிற்காக நடைபெறும் மேற்குறிப்பிட்ட நிகழ்வு நாட்களில் முடிந்தவரை ஏனைய நிகழ்ச்சிகளை தவிர்த்துக் கொள்ளுமாறு பிரித்தானியா வாழ் தமிழீழ மக்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க மணமக்கள்

காரைநகர், வாரிவளவு திரு/திருமதி தம்பிராசாவின் திருநிறைச் செல்வன் மகேசனுக்கும், அவ்வூர் ஆயிலியைச் சேர்ந்த திரு/திருமதி கணேசன் தம்பதிகளின் திரு நிறைச் செல்வி சசிகலா அவர்களுக்கும் 24. 08. 96 அன்று இலண்டன் செசிங்கரன் சனசமூக கல்லூரி, சறே மண்டபத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் "தமிழும் சுவையும் "போல நீடூழி வாழ காரை ஒளி வெளியீட்டார் வாழ்த்து கின்றனர்.

## நினைவாஞ்சலி

### அமரர் திரு வேலுப்பிள்ளை சண்முகம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற அதிபரும், முன்னாள் காரைநகர் தெற்கு கிராமசபைத் தலைவரும் ஆகிய திரு.வேலுப்பிள்ளை சண்முகம் அவர்கள் தமது 86 வயதில் 09. 12. 96 ல் யாழ்ப்பாணத்தில் சிவபதம் எய்தினார். அன்னாரின் மறைவுக்கு காரைஒளி வெளி யீட்டார் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத் தையும் அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக் கின்றனர்.

### அமரர் திருமதி செந்தில் நாயகி சுந்தரமூர்த்தி

காரைநகர், இடைப்பட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செந்தில் நாயகி சுந்தரமூர்த்தி அவர்கள் கம்பறையில் 04. 12. 96ல் சிவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் மறைவுக்கு காரைஒளி வெளியீட்டார் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கின்றனர்

### திருமதி மனோன்மணி

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரபல சட்டத்தரணி குல சிங்கம் அவர்களின் மகளுமாகிய திருமதி மனோன்மணி கந்தையா அவர்கள் 11. 12. 96ல் சிவபதமடைந்தார்கள். அன்னாரின் மறைவுக்கு காரைஒளி வெளியீட்டார் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கின்றனர்.

## வருந்துகின்றோம்

90 இலங்கை தமிழர்கள் கிரேக்கக் கடலில் உயிர் இழந்த பரிதாப சம்பவம் தமிழர்களை கதிகலங்க வைத்துள்ளது. இலங்கையில் வாழ முடியாது என்று ஓடித்தப்ப, இலட்சக் கணக்கான பணத்தை இழந்ததுடன் இறுதியில் உயிரையும் பலி கொடுத்து விட்டனர். இப்படியும் ஒரு நிலையா ஈழ த்தமிழருக்கு!

## நினைவு கூருவோம்

எழுத்தாலும், பேச்சாலும், தமிழுக்கு பெரும் பணி ஆற்றி வந்தவரும், தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்து பாராட்டுப் பெற்றவருமாகிய அமரர் நாவலர் கணபதிப்பிள்ளை நவஜோதி அவர் கள் மறைந்து ஏழு ஆண்டுகள். அன்னாரை நினைவு கூருவோம்.

*Read*

**HOT SPRING**

*(A Journal of commitment valuable informations of Tamil struggle)*

*Editor*
*S. Sivanayagam*

*Price:£1.00*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்



சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில் 1

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமல நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல்கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள். 2

சிவதொண்டு செய்து திருமா லுலகாண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரன் சிவமானான்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல்முன்னாள்
சிவதொண்டு செய்வார்க்கு முண்டோ குறைசொல்வாய் 3

சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் காரமில்லை
சிவதொண்டு செய்வார்க் கிரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழியூ னுணவுமில்லை. 4

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார். 5

**சிவயோக சுவாமிகள்** அருளிச் செய்த நற்சிந்தனைப் பாடல்களில் ஒன்று தான் மேலே தரப்பட்டுள்ளது. சிவதொண்டு செய்பவர்களின் சிறப்பை இலகு தமிழில் மிகவும் தெளிவாக மேலும் சுவாமி சொல்கிறார். **நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழ்கின்றோம்.**

இவ்வாறு சிவயோக சுவாமிகளால் சிறப்பித்துச் சொல்லப்படும் சிவதொண்டு பற்றி சுவாமிகளின் நற்சீடரான **குரு தேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்** பின்வருமாறு சொல்கிறார். **கோயில்களில் செய்யும் தொண்டு மட்டும் சிவதொண்டு அல்ல. மக்களுக்கு மக்கள் செய்யும் தொண்டும் சிவ தொண்டேயாகும். இன்று அகதிகளாகியுள்ள மக்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வது மிகச் சிறந்த சிவதொண்டாகும்.**

சிவயோக சுவாமிகள் தோன்றாத்துணையாக நின்று இயக்கும் சிவதொண்டன் நிலையம் (UK) லண்டனில் **12.09.93** இல் ஆரம்பமாகிச் சிவ தொண்டுகளாற்றி வருகிறது. **256B High Street North, Manor Park, London E12 6SB**. எனும் இடத்தில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையம் (U.K) இன் பிரார்த்தனை மண்டபத்தில் தினசரி பூசையும் **ஒவ்வொரு மாதத்தினது முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் பிற்பகல் 3.00 மணி முதல் 5.00 மணி வரை கிரமந் தவறாது கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்று வருகிறது.** இம் மாதாந்தக் கூட்டுப்பிரார்த்தனையில் திருமுறைப் பாராயணம், நற்சிந்தனைப் பாராயணம், சமயச் சொற்பொழிவுகள் ஆகியன இடம் பெறுகின்றன. இத்துடன் சிவயோகசுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனைப் (பாடல்கள்) புத்தகங்களையும் விரும்பும் அடியார்களுக்கு இலங்கையில் இருந்து வருவித்துக் கொடுக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்கள் பெற விரும்புவோர் 0181 552 6381, 0181 543 2126, ஆகிய இலக்க தொலைபேசிகளில் தொடர்பு கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். **ஓம் நமசிவாய. சற்குரு சிவயோக சுவாமிகள் திருவடிகள் போற்றி! போற்றி.!**

**— சிவதொண்டன் நிலையம் (U.K) நிர்வாக சபையினர் —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலேயரின் பாராட்டைப் பெற்ற தமிழ் ஈழத்து இளம் கவிஞர்

பன்னெடுங்காலமாக ஆங்கிலேயக் கவிஞர்களை உருவாக்கிய பிரித்தானிய நாட்டில் தமிழ் ஈழத்தைச் சேர்ந்த எட்டே வயது நிரம்பிய செல்வி லக்ஷ்மி சிறிக் கந்தராசா (Out and about) "வெளிப்புறமும் அங்குமிங்கும்" என்னும் ஆங்கிலக் கவிதைத் தொகுப்பை இயற்றித் தந்து ஆங்கிலேயரின் பாராட்டைப் பெற்றார். அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனும் அதனைப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.



Lakshmi Srikantharajah
L to R: Ms Jenny Cairns (Director of Education, Merton), Ms Debby Lewis Deputy Head Teacher Garfield 1st School, Mr Tony Colman, Leader, Merton Council.


**NATHAN & CHELVA**
Solicitors

Your Satisfaction Is Our Happiness

we offer you Prompt and Proper Service in all Legal Matters.
Legal Aid Work also undertaken

Partners:
K.Chelva-Nayagam LLB,
T.Sri Pathma Nathan
(Former Advocate of Sri Lanka)

169, Tooting High Street,
London SW17 OSY

Tel: 0181 - 672 1800
Fax: 0181 - 672 0105


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி சரணம்

புட்ட பர்த்தி வாழ் புனித மகானே மக்கள்
பட்ட துயர் போக்கும் பரிவுத் தெய்வமே
வட்ட முகத்து மனு உருவே மதன ரூபனே
அட்டதிக்கும் அருள்பாய்ச்சும் பாபாவே சரணம்

ஊஞ்சலாடும் உத்தமனே உலகீர்க்கு முன்னதனே
பூஞ்சோலை மணத்தோனே புண்ணியப் பராபரனே
பாஞ்சாலி புகழ்காத்த கண்ணபிரான் திருவுருவே
ஆஞ்சனேயர் துதித்த ஷீராம வள்ளலே சரணம்

சாதி சமயமற்ற சாந்தத்தின் பேருருவே
நீதி நெறிவழுவா நித்திய நாதனே
சோதிக் கண்ணோனே சுந்தரத் திருமகனே
மேதினி போற்றும் சாயியே சரணம்

வருங்கால முணர்ந்த வெற்றித் திருமகனே
குருவாய் வந்துதித்த குவலயத் திருவொளியே
திருநீறால் துயர்துடைக்கும் தூயவனே
திருவே திருசடையே யுன்கழல் சரணம்

வேண்டியோர்க்கு நித்தம் வேதனை தீர்ப்போனே
மீண்டும் பிறந்தோனே மாங்கல்யந் தருவோனே
நீண்ட துயர்களையும் நற்குணதயாளனே
ஆண்டுந் திருலிங்கம் மீட்ட தேவனே சரணம்

எல்லாம் வல்லோனே எல்லார்க்கும் பெருமானே
சொல்லும் செயலும் நிறைவேற்ற வல்லோனே
இல்லார்க்கு இனியவனே இன்பத்திருவுற்றே
நல்லார்க்கு நலங்காக்கும் நாமகனே சரணம்

ஏடெற்ற மக்களையும் எண்ணி மனமுருகி
தேடற்கரிய பாசம் தேடும் திருமகனே
பாடஉன் புகழைப் பத்தியோங்கவைக்கும்
ஈடற்ற இக்கால அற்புதனே சரணம்.

அன்னை தந்தை நீயே அருங் குருவுந் நீயே
முன்னை வினை தீர்த்து மீறுதலும் அறுத்து
பின்னை வருமின்னல் தொடராத் தடுப்போனே
உன்னைப் பணிந்தோரின் உள்ளொளியே சரணம்



கீதத்தை ரசிப்போனே குலமாதரைக் காப்போனே
பூதகணந்துரத்திப் பத்தரைக் காப்போனே
வேதத்தையுணர்ந்தோனே வேளைக்கு வருவோனே
ஓதப்பாடல் தருமுன் திருவடிதினஞ் சரணம்.

அய்யனே அருஞ்சுடரே ஆனந்தத்தேனமுதே
உய்யவழியுரைக்கும் உள்ளங்கடந்தோனே
மெய்யடியார் நெஞ்சில் மனைகொண்ட மாதவனே
பெய்யும் அருள் மழையே பகலவனே சரணம்

பொன்வளமேனியனே பூரணசந்திரனே
பன்மொழி வல்லோனே பரந்தில்லைராஜனே
மன்னுயிர் தினங்காக்கும் முத்தொழில் ரச்சகனே
புன்னகைப் பேரன்பேயுன் பாதமென்றுஞ் சரணம்

போதனை கேட்டால் பேறு தேடிவரும்
புகழுரைகள் பாட பாவம் பறந்து விடும்
பாரததேசத்திலுத்த பரந்தாமா எங்கள்
பார் கண்ட கடவுளே பங்கயனே சரணம்

பிரசாந்தி நிலையத்தில் புகலிடம் பெற்றோனே
பத்தரின் மனமெங்குங் குடிகொண்டு அன்பால்
அரசாளும் அகிலத்து வைத்தியனே நித்தம்
அஞ்ஞான இருளகற்றும் ஆரணனே சரணம்.

கடிகமழ் கலையுருவேயுன் திருநாமம் சரணம்
அடிமுடிதெரியாதுன்தன் திரு நிழல் சரணம்
வடிவுடையமலனேயுத்தன் வண்திருப்பாதம் சரணம்
கொடி மலர் பவளனேயுன் திருமேனிசரணம் சரணம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விஜயலட்சுமி நாகேந்திரன் 15.12.96 அன்று இலண்டனில் இறையடி சேர்ந்தார். அன்னார் இருபத்தியேழு வருட காலமாக சத்தியசாயிபாபா வழிபாட்டில் ஈடுபட்ட ஒரு பக்தராக வாழ்ந்து வந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய, அவரது நினைவாக அவரின் கணவரினால் இயற்றப்பட்ட கவிதை வெளியிடப்படுகிறது. சாயிராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் ஒரு தமிழர் நகை மாளிகை
# WESTERN JEWELLERS

உங்கள் மனம் கவர்ந்த புத்தம் புதிய டிசைன்களில் சிங்கப்பூர் தங்க நகைகளுக்கும் நீங்கள் விரும்பும் டிசைன்களில் கை வேலைப்பாட்டுகளுடன் உங்கள் திருப்திக்கேற்ப அசல் 22கரட் தாலிக்கொடிகள், கல் அட்டியல்கள், சங்கிலிகள், முத்துச் சங்கிலிகள், பதக்கங்கள், மரகதப்பதக்கங்கள், காப்புகள், கல்தோடுகள், சிமிக்கிகள், மோதிரங்கள், ஓம் சுவாமிப் பென்ரன்கள், எழுத்துப் பென்ரன்கள், சிறுபிள்ளைகளுக்குத் தேவையான பஞ்சாயுதம், கைச்சங்கிலி, மோதிரங்கள் ஆகிய அனைத்து நகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழர் நகைமாளிகை

## வெஸ்டன் ஜுவலர்ஸ்

உங்கள் எதிர்கால வாழ்வு, துன்பம், துயரங்களிலிருந்து விடுபட்டு வெற்றிப்பாதையில் செல்ல உங்கள் ராசிக்கு ஏற்ற ஒளியூட்டும் அசல் இரத்தினக் கற்களைப் பதித்து மோதிரம் செய்ய காத்திருக்கிறார்கள்.

# வெஸ்டன் ஜுவலர்ஸ்

230, Upper Tooting Road
Tooting
London SW17 7EW.
**Tel: 0181 767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கப்படும்
(Open 7 Days a Week)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்பற்று எதனை இழந்திடினும் உரிமையினை
இழந்திடலாகாது என்ற உறுதியினை ஊட்டுவது

அறிஞர் அண்ணா

KUMARANS

# குமரன்ஸ்

# KUMARANS

தரமான இலங்கை இந்தியப்
பொருட்கள் எங்கே
மலிவாகக் கிடைக்கும்?

இலங்கை இந்தியப் பொருட்களுடன் பண்டைய
இலக்கியங்கள், தமிழகத்தின் சிறந்த எழுத்தாளரின்
நாலவ்கள் கவிதைகள் சமய நூல்கள் மற்றும் பட்டு
புடவைகள், வேட்டிகள், போன்ற எல்லாவிதப்
பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நீங்கள் தயங்காது நாட வேண்டிய தமிழ்க் கடை
குமரன்ஸ்

**KUMARANS**
142-144 Hoe Street
Walthamstow
London E17 4QR
**Tel: 0181 - 521 4955**
Fax: 0181 - 521 9482

**KUMARANS**
532-536 Forest Road
Walthamstow
London E17 4NB
**Tel: 0181 - 925 7720**
Fax: 0181 - 925 7721

**KUMARANS**
69 Holloway Road
Highbury & Islington
London N7 8JZ
**Tel: 0171 - 609 1912**
Fax: 0171 - 609 0501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# TILKO
## PROPERTY SERVICES

*With a reputation as one of the leading letting agents in East London and Essex, we pride ourselves in our caring and genuine service for all our clients.*

## LANDLORDS!

*Rent Guarantee Scheme*
*Take this opportunity to experience our most popular and unique Rent Guarantee Scheme.*

## TENANTS

*Properties available in all areas of East London and Essex with no fees at any stage and low deposit.*
*(Subject to status and satisfactory ref)*

STOP PRESS!! STOP PRESS!!

*We would like to take this opportunity to thank all our* ***LANDLORDS*** *and* ***TENANTS*** *who have helped to make our business such a success.*

**Walthamstow Branch**
252 Hoe Street
Walthamstow
London E17 3AX
Tel: 0181 520 9968
Fax: 0181 503 7661

**Ilford Branch**
101 Cranbrook Road
Ilford
Essex IG1 4PU
Tel: 0181 514 1422
Fax: 0181 553 3991

**Eastham Branch**
213 High Street North
East Ham
London E6 1JG
Tel: 0181 472 0029
Fax: 0181 503 5996

Printed by JR print Tel: 0181 - 503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org